
# மாற்றம்

மக்கள் சஞ்சிகை

பயணம்: 01 பாதை: 01



ஆசிரியர்:
யாதுமூரான்



இணை ஆசிரியர்
மல்லிகை மைந்தன்

வெளியீடு
தமிழ்த்தாய் மன்றம்

தொடர்பு:
/6, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

ஐப்பசி - மார்கழி 1992

சமூகம் என்பது கொடிய பிசாசைப் போன்றது. அது ஒவ்வொரு மனிதர்களையும் விமர்சிக்கத் தவறவில்லை.

'விமர்சனம்' என்பது வேண்டப்படுவதே. ஆனால் அநீதியான விமர்சனங்கள் மக்களின் அழிவுக்கு வழி சமைக்கிறது.

இந்தச் சமூகம் அழகான பெண்களை இழிவாகச் சொல்லுகிறது.

வீடு வாசலில்லாது அனாதையாய் அல்லலுறுவோரை வெட்கம் விட்டெறிந்து இரப்போரை, 'பிச்சைக்காரர்' என்கிறது

சமூகம் சாதிகளைக் கூறுகிறது. கலைஞர்களை சாதிக் கோட்பாடுகளுக்குள் இட்டு நிறுவைபார்க்கிறது.

உதவ வேண்டியவருக்கு உதவ மறுக்கிறது உதவ மறுப்பவருக்கு வஞ்சம் என்ற பேர்வழியில் உதவி வருகிறது

அது நல்லவர் யாரையும் முன்னுக்கு வர விடுவதில்லை யார் யாரை விழுங்கிக்கொள்ள முடிகிறதோ அவர்களை விழுங்கி விடுகிறது.

இவ்வாறான கொடிய சமூக அமைப்பு மாற்றப்பட வேண்டும். அன்றி முற்றாக அழிக்கப்பட வேண்டும்.

இதற்கு மக்கள் மனதில் மாற்றம் தேவை எனவே. 'மாற்றம்' மக்களின் சஞ்சிகையாக மலர்கிறது.

- ஆசிரியர்

வாசகர்களே!

இம் மாற்றம் சஞ்சிகையை மூன்று மாதத்திற்கு ஒரு முறை (காலாண்டு சஞ்சிகையாக) வெளியிடவுள்ளோம். இச் சஞ்சிகைபற்றிய உங்களுடைய கருத்துக்களை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். உங்களுடைய ஆதரவே மாற்றம் நீடுழி நிலைக்க உதவும்.

ஒவியர்;
ரமணி
தயா

விளம்பர அமைப்பு;
பே. ராஜவர்மன்
சோ. பிரகலாதன்

விநியோகம்:
ஆ. பாலேஷ்வரன்
எஸ். கேதீஸ்வரன்
ப. பிரேமசீலன்

ஒற்றுரு:
ஆனந்தன்

அச்சமைப்பு:
முல்லை அச்சகம்

பதிப்பாளர்:
பொற்கமலதேவி பதிப்பகம்

பக்கங்கள்: 40

அடுத்த இதழ்:
1993 தைமாதத்தில்.

# உள்ளே . . . .


☐ அந்த நூறு நாட்கள்
☐ சங்கத்தமிழன் வீரம்
☐ யார் இவர்கள்?
☐ சேலை கட்டிய மாதரை . .
☐ மாமனிதர் கலைஞானியுடன் ஒரு செவ்வி
☐ எயிட்ஸ்
☐ 'ஹலி'யின் வால் வெள்ளி
☐ கானல் வரி (சிறுகதை)
☐ புலவர் பொ. ஜெகந்நாதன்
☐ சுருட்டியின் பதில்கள்
☐ உங்களுக்குத் தெரியுமா?
☐ ஊருக்கொரு சுந்தரி
☐ வீறுதமிழ் காத்திடவா!
☐ சுவையான புதினங்கள்
☐ பேனா நண்பர்கள்
☐ குறுக்கெழுத்துப் போட்டி


இவ்விதழில் இடம் பெறும் கட்டுரைகள் மற்றும் கருத்துக்கள் யாவும் அவ்வவ் எழுத்தாளர்களின் சொந்த கருத்துக்களாகும். உங்களுடைய தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

- ஆ.ர்

# அந்த நூறு நாட்கள்

விடுமுறையைக் கழிப்பதற்காக வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணம் ஒன்றை மேற்கொண்ட நான் சிங்கப்பூருக்கும் மணிலாவுக்கும் சென்றேன். மணிலாவில் ஒருநாள் தங்கியிருந்துவிட்டு அங்கிருந்து 1,677 km தூரத்திலுள்ள பலோ (Palau) என்னும் நாட்டைச் சென்றடைந்தேன்.

அந்த நாட்டு மக்கள் சிலர் அரக்கர்களை ஒத்த உருவத்திலே காணப்பட்டனர். நான் கொண்டுசென்ற ஒடியல்மாவை முகர்ந்து

---

'யப்' (Yap) புதுமையான ஒரு தீவு. அங்கே எடுப்பாரும் இல்லை, கொடுப்பாரும் இல்லை. அந்நாட்டு மக்கள் புற்களாலான ஆடைகளைப் பண்பாட்டு உடையாக அணிகிறார்கள்.

அந்த நாட்டின் தலைவர் (தேசாதிபதி) குடிசையிலேயே வாழ்கிறார். அவரது மனைவி தபாலகம் ஒன்றிலே வேலை செய்கிறார்.

---

போதைவஸ்தா எனச் சோதித்தனர்? அடுத்து மிளகாய்த்தூளையும் கையில் எடுத்து ஏதோ பயங்கரமான பொருளை ஆராய்வதுபோல ஆராய்ந்தார்கள்.

பலோவிலும் ஒருநாள் தங்கினேன் அடுத்ததாக பலோவிலிருந்து 454 km தூரத்திலுள்ள யப் (YAP) என்னும் நாட்டுக்குச் செல்லப் புறப்பட்டேன். விமானம் ஓடுபாதையூடாக ஓடிப்பறக்கலானது. எனது மனம் அப்போது யப்பில் ஆசிரியர் தொழில் பார்க்கச் சென்றிருந்த அப்பாவையும், அம்மாவையும், சகோதரர்களையும் பார்க்க எண்ணித் துடித்துக் கொண்டிருந்தது.

ஒரு மணித்தியாலத்தின் பின் விமானத்தில் உள்ள ஒலிபெருக்கியில் வேற்றுமொழியில் ஏதோ அறிவிக்கப்பட்டது விமானம் சடுதியாகத் தரையிறக்கப்பட்டது. நான் பெற்றோரைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலில் முண்டியடித்துக்கொண்டு இறங்கிவிட்டேன்.

நேரம் நடுநிசி. எங்கும் 'கும்' என்ற இருள். தூரத்தே ஒரு கொட்டகை காணப்பட்டது. அதற்குள் மின்குமிழ்கள் ஒளி வீசின. தன்னந் தனியே நடுநிசியில் நடுக்காட்டில் விடப்பட்டது போன்ற பயவுணர்வுடன் நான் அந்தக் கொட்டகையை நோக்கி நடக்கலானேன்.

அந்தக் கொட்டகை சிறைக்கூடம் மாதிரி பலகைகளாலும், தடிகளாலும் அடைக்கப்பட்டிருந்தது. அதற்குள் பல நிறத்தவர்கள் காணப்பட்டனர். அவர்களில் சிலர் அரையில் துண்டுகள் கட்டியபடி நின்றனர், அவர்கள் இரு கைகளிலும் தலையிலும் மாலை கட்டியிருந்தனர். கழுத்திலும் மாலை அணிந்திருந்தனர். அவர்களது வாய்கள் இரத்தச் சிவப்பாகக் காணப்பட்டன. அவர்களில் சிலர் சிறிய கத்திகளை இடையில் செருகியிருந்தனர். புத்தகங்களில் நான் படித்த ஆதிகால மனிதரை அவர்கள் எனக்கு நினைவூட்டுபவர்களாகக் காணப்பட்டனர்.

அவர்களின் அருகில் சென்ற நான் அவர்களது மொழி விளங்காமல் விழித்தேன்.

அப்போது 'அண்ணா' என்றொரு குரல் கேட்டது.

நான் குரலெழுந்த திசைநோக்கித் திரும்பினேன். அங்கே எனது பெற்றோரும் சகோதரரும் நின்றார்கள்.

பின்னர் நாங்கள் அமெரிக்கர் ஒருவருடைய உதவியுடன் சிறு மலைப்பகுதியில் இருக்கும் எமது வீட்டைச் சென்றடைந்தோம்.

## (2)

அடுத்தநாள் காலை புலர்ந்தது. நான் அந்த நாட்டைப் பற்றி அறியும் ஆவலுடன் எழுந்தேன்.

அந்நாடு கி. நெ 130° க்கும் 140° க்கும் இடையிலும், வ. அ 0° க்கும் 10° க்கும் இடையிலும் அமைந்துள்ள தீவுக்கூட்டங்களில் முக்கியமான நாடாக விளங்குகிறது. அந்நாட்டு மக்கள் யப் என்னும் மொழி பேசுவதால் 'யப்பிஸ்' என அழைக்கப்படுகின்றனர் என அறிந்தேன். அந்நாட்டின் மொத்தச்சனத்தொகை சுமார் ஏழாயிரம்தான் இருக்கும். சிறிய தீவு. ஆனால் புதுமையான தீவு.

### கல் நாணயங்கள்

இன்றும் கல் நாணயங்கள் பயன்பாட்டிலுள்ள ஒருநாடாக 'யப்' விளங்குகின்றது. சிறியளவு முதல் பெரியளவிலான நாணயங்களாக அவை காணப்படுகின்றன. தட்டையான, வட்டவடிவமுள்ள அந்நாணயங்கள் 6 அங். முதல் 3 அடி விட்டமுடையனவாக காணப்படுகின்றன தூக்கிச் செல்வதற்கு வசதியாக நாணயக் கற்கள் துளையிடப்பட்டுக் காணப்படுகின்றன. அந்நாணயங்களைத் தூக்கிச்செல்கையில் துளையினூடாக மரக்குற்றிகளை விட்டு இரு பக்கங்களிலும் ஒவ்வொருவராக அவர்கள் சுமந்து செல்வர் இன்றும்கூட கற்காசைக் கொடுத்துக் காணித்துண்டொன்றுவாங்க முடியும். (அடுத்த இதழில் தொடரும்)

யா.ன்.

# சங்கத் தமிழன் வீரம்

சங்ககாலம் என்பது கி. பி. முதல் முன்னூறு ஆண்டுகளை உள்ளடக்கிய காலப்பகுதியாகும். இக் காலம் தமிழர்களுடைய வரலாற்றில் முக்கியமான காலப்பரப்பாகும். தமிழர் வரலாற்றில் ஆதார பூர்வமான விடயங்களை தமிழ்ப் பண்பாட்டின் கோலங்களைத் தன்னகத்தே இக்காலம் கொண்டுள்ளது. அக்காலத்தமிழன் வீரத்தில் சிறந்து விளங்கியுள்ளான் என்பதை அக்காலத்தில் எழுந்த தமிழ் நூல்களின் வாயிலாக அறிய முடிகிறது.

சங்ககால தமிழர்வாழ்வில் பல வகைப்பட்ட போர்கள் நிகழ்ந்துள்ளன. இதன்வாயிலாக மன்னர்கள் முதல் சாதாரண மக்கள்வரை அனைவரும் வீரப் பண்புடையவர்களாக கணப்படுவதை அறிய முடிகின்றது. அவர்களது தொழில், விளையாட்டு யாவும் போர்த்திறன் மிக்கவையாக இருந்தன. பிள்ளைகள் பிறந்தவுடன் அவர்களுக்கு போர் வீரர்களதும், போர்ப்படைகளதும் சின்னங்கள் பொறித்த தாலியை கட்டி மகிழ்வர். புலிப்பற்களைக் கோர்த்த தாலிகளையும் அணிந்து மகிழ்வர்.

அன்றைய தமிழர் ''நான் போரிலே தோற்பேனாயின், எனது அருமை மனைவியையும் எனது சொத்துக்களையும் விட்டுப் பிரிந்து விடுவேன்'' என்று சத்தியம் செய்துவிட்டுப் போருக்குச் சென்றனர். மானத்தை இழந்து வாழ்வதை விட சாவதே மேல் என எண்ணி உயிர் துறந்தனர். எதிரியிடம் பிடிபட்ட வீரர்களும், அரசர்களும் எதிரிகளின் உணவை உண்ணாது தமது இன்னுயிர்களைவிட்டு வீரச் சாவடைந்தனர்

அக்காலத்தில் போர்க்களதில் இறந்தவர்களையே வீரர் என்று கொண்டனர். இதனால் வேறு நோயினால் இறந்தவர்களையும் போர் வாள்களினால் வெட்டிக் காயப்படுத்தி புண்களை ஏற்படுத்தியபின்பே அவ்வுடலைத் தகனம் செய்தனர்.

போர்கள் ஏற்படும்போது போர்க்களங்கள் குறிக்கப்பட்டு போர்கள் நடந்தன. போர்களிலே தானைகளை மாத்திரம் மோதவிட்டு அரசர்கள் பாதுகாப்புத் தேடிப் போய் ஒளிந்துகொள்வதில்லை. மாறாக போக்களத்திலே அரசர்களும் போர்க் கருவிகளை ஏந்தி போரிட்டனர் போர்க்களத்தில் சாதனை படைத்த வீரர்கள் மதிக்கப்பட்டார்கள். அத்தகைய வீரர்களுக்கு விளைச்சல் மிகுந்த மருத நிலப்பரப்புக்கள் அரசர்களினால் பரிசாக வழங்கப்பட்டன. வீரச் சாவை அடைந்தவர்கள் நினைவாக நடுகேற்களை நட்டு வழிபடப்பட்டார்கள். பூசிக்கப்பட்டார்கள்.

அக்காலப் பெண்கள் தமது பிள்ளைகள் வீரர்களாகத்திகழ வேண்டுமென இறைவனை நோக்கித் தவமிருந்தனர், வரம்கிடந்தனர். முந்தநாள் நடந்த போரிலே தமையனையும் நேற்றைய போரிலே கணவனையும் இழந்த கைம்பெண் கூட இன்றைய போருக்கு போர்முரசு கேட்டவுடன் தனது அருமை மைந்தனை போருக்கு செல்லுமாறு வேல் கொடுத்து அனுப்பிவைத்தாளாம். இவ்வாறு சங்ககால பெண்கள் வீரப் பண்புடையவர்களாக விளங்கினார்கள்.

ஒரு பகைநாட்டின் மேல்படையெடுப்பவர்கள் தாம் வெற்றி பெற்றுகைப்பற்றிய இடங்களிலே தமது வெற்றியின் சின்னமாக பல அடையாளங்களைப் பொறித்து சென்றனர். போர்க் களங்களில் பகைவரைக் கொன்றுவிட்டு அவர்களது மண்டை ஓடுகளையும், எலும்புகளையும், பற்களையும் பயன்படுத்தி நினைவுச் சின்னங்களை அமைத்துச் சென்றனர். கைப்பற்றிய கோட்டையின் வாயிற் சுவர்களிலும், தளங்களிலும் பகைவரது பற்களைப் பிடுங்கி பளிங்காகப் பதித்தனர்.

தமிழர்கள் தமிழ்நாட்டில் மட்டுமன்றி கடல் கடந்த தூர இடங்களிலும் போர்களை நடாத்தி வெற்றியடைந்துள்ளனர். கடல் வழியாக ஈழம் முதல் கடாரம் வரையான நாடுகளை போர் மூலம் வென்றுள்ளனர். மலேசியா, கம்போடியா, தாய்லாந்துபோன்ற தற்போதைய நாடுகளும் சங்கத் தமிழன் ஆதிக்கத்திற்குட்பட்டு இருந்ததாக ஆதாரங்கள் கூறப் பட்டு நிறுவப்பட்டுள்ளன இது மட்டுமன்றி தமிழன் சென்றுவந்த பிரதேசங்களுடன் நட்புரீதியிலான போர்ப் போட்டிகளும் நிகழ்த்தியிருக்கின்றான்.

தமிழன் இன்று நேற்றல்ல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வீரத்தில் சிறந்தவனாக வாழ்ந்துள்ளான் என்பதை தமிழனுடைய வீர வரலாற்றை அறிந்தவன் ஒருவனும் மறுக்க மாட்டான். தமிழனுடைய வீர உணர்வு அன்றும் அப்படித்தான் இன்றும் அப்படித்தான். காலம் தான் மாறியுள்ளதே தவிர தமிழனுடைய உள்ளுணர்வு மாறவில்லை. வீர உணர்வு மாறவில்லை.

ம. மை.

---

ஒரு வகுப்பாரைக்கு குரூர மிருகமாகவும், மற்றொரு வகுப்பாரை அந்த மிருகத்துக்கு இரையாகும் பலவீன மிருகமாகவும் செய்யும் இன்றைய சமூகஅமைப்பு ஒழியத்தான் வேண்டும்.

— காண்டேகர்

# யார் இவர்கள் ?

நல்லூர் திருவிழாக்காலம் நேரம் இரவு ஏழுமணிக்கு மேல் தெய்வீக இசையரங்கு ஆலயமுன்றலில் நடைபெற்றுக் கொண்டிருந்தது எனது விழிகள் கலாரசிகர்கள்பால் திரும்பியது அப்போது அந்த தேனீர்க்கடை மூலையில் பூணூல் தரித்தஒருவர் நின்று இசையை நன்றாக ரசித்துக் கொண்டிருந்தார், அவர் தெய்வீக இசை கேட்க ஒற்றைக் காலில் நின்றார் ..

ஆம், அந்த ஏழைஅந்தணரின் ஒற்றைக்கால் அந்நிய வைத்தியர் ஒருவரால் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டு கழற்றப்பட்டிருந்தது.

அந்த இசைப் பிரியர்; குருக்கள் கல்வியின் சிகரம் எனத்தகும் யாழ் / பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிக துறையின் மதிப்புக்குரிய பேராசிரியராக இருந்த கைலாசநாதக்குருக்களின் மருமகன்; கண்ணன் குருக்கள். அவர் ஒரு சிறந்த சோதிடர்; நடிகரும் கூட.

★ ★ ★

நல்லூர்வாயில்புறவீதி நேரம் இரவு எட்டுமணியிருக்கும், சிறிதாக வளர்ந்த தாடியுடன் ஒருவர் வீதிக்கரையில் இருந்து பாடுகிறார் இளைஞர்கள் அவரை ஊக்குவிக்கிறார்கள். மக்கள் கூட்டம் ஒன்று அங்கு கூடுகிறது. சிறிது நேரத்தில் மக்கள் கூட்டத்தை நோக்கி மக்கள்படை எடுக்கிறார்கள் அருமையான பாடல்கள்; பக்கவாத்தியங்கள் எதுவுமில்லை ஆனால் இனிமையாக இருந்தது. கோஷ்டி பாடகர்கள் கூட தோற்றுவிடும் சிறந்த பாடகர்.

★ ★ ★

யார் இவர்கள்? வேறுயாருமல்ல, இம்மண்ணின் அழுக்குமுடையுடனும் கந்தலாடையுடனும் உலாவரும் மாமனிதர்கள், சமூகத்தினால் பிச்சைகாரர் பட்டம் சூட்டப்பட்டவர்கள், நல்லூருக்கு உரித்தானவாகள்.

'பிச்சைவேண்டாம் நாயை பிடி' என்று இரங்கும் இவர்களில், முதலாமவர் குருக்கள்; இவர் மக்களால் பூசிக்கப்படவேண்டியவர். ஆனால் சமுதாயம் இவரை தூசிப்பொருளாகக்கருதுகிறது.

இரண்டாமவர் கண்பார்வை குறைந்த, படிப்பறிவற்ற சிறந்த பாடகன். ஆனால் ஏழை

உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் ஏதோ வழிவதாகக் கூறிக்கொள்ளும் இச்சமூகம் ஏன் இந்த எத்தனை ஆயிரம் ஆயிரம் ஏழைகளுக்காக ஒரு துளி கண்ணீர் வடிப்பதற்கு பின்னிற்கிறது.

யா · ன்

# சேலை கட்டிய மாதரை....?

இப்படி ஒரு பழமொழி இதன் பொருள் சேலைகட்டி வரும் பெண்களை நம்பக்கூடாது. ஏனைய பெண்களை நம்பலாம் என்பதா?

இவ்வாறான பழமொழிகள் நடைமுறையில் பெண்களை இழிவு படுத்துவதாக அமைந்து விடுகிறது.

இவ்வாறே, திருக்குறளிலே இல்லறவியலிலே மனைமாட்சி என்னும் அதிகாரத்தில் பெண்கள் ''கற்பு'' என்ற போர்வையில் ஒடுக்கி காட்டப் படுகிறார்கள்

இன்றைய இளைஞர்கள் கூட பெண்களை தமது மனவியல் குறை பாடுகளின் காரணமாக இழித்துப் பேசுவதும் உண்டு. இவர்களே 'சேலை கட்டிய மாந்தரை நம்பாதே!' ''பெண்களை கண்டால் பேயும்இரங்கும் இது பேய் அதுவும் பேய்'' என அர்த்தமற்ற வார்த்தைகளை பிரயோ சிக்கின்றார்கள். இப்படி கீழ்த்தனமான கருத்துகளுக்கு பழமொழிகள் உதவிவருகின்றது.

பழமொழிகள் என்ன பிற்போக்குத்தன்மையானவையா? அன்றி, சேலை கட்டிய மாதர் யார்? ஏன் அவர்களைநம்பக்கூடாது? இவ்வா றான சிந்தனைகள் உங்கள் மனதில் எழலாம்.

நாம் இப்பழமொழியை சற்று விரிவாக நோக்கின் 'சேல் அட்டிய மாதரை நம்பாதே' என வரும் அதாவது கயல்மீன் போன்ற வலுவுடைய கண்களால் அங்குமிங்கும் விரகதாப பார்வை பார்க்கின்ற பெண்களை நம்பாதே! இதுவே உண்மைப்பொருள்.

யா. ன்

---

## பழமொழிப் பொருட் போட்டி: 01

(1) 'எறும்பு தின்றால் கண் தெரியும்'

(2) 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு'

(3) 'சேலைகட்டிய மாதரை நம்பாதே'

(4) 'கைப்புண்ணுக்கு கண்ணாடி எதற்கு?'

(5) 'கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கைவையாதே'

மேலுள்ள பழமொழிகளுக்கான பொருட்களை 15-12-92 க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

# மாமனிதருடன் ஒரு செவ்வி

கே:- ஐயா, ''மாற்றம்'' வாசகர்களுக்கு உங்களை அறிமுகப் படுத்துவீர்களா?'

பதில்:- என்னை ''கலைஞானி'' என்று அழைப்பார்கள். இயற் பெயரை கூறுவதில் எனக்கு இஷ்டமில்லை. குரும்பசிட்டியில் பிறந் தேன் வளர்ந்தேன். இன்று நாடோடியாக இருக்கின்றேன். அரும்பொருட் களைச் சேகரிப்பது எனது பொழுதுபோக்கு.

கே:- அரும்பொருட்சேகரிப்பில் எவ்வளவு காலமாக ஈடுபட்டுள் ளீர்கள்?

ப:- 1947-ம் ஆண்டு மாசி மாதம் 23-ம் திகதி 3 சங்குகளும், 3 காசுகளும் எடுத்ததில் இருந்து இற்றைவரை ஈடுபட்டுள்ளேன்.

கலைஞானி என்பவர் குரும்பசிட்டி யைப் பிறப்பிடமாகக்கொண்டவர். அவ ரது இயற்பெயர் செல்வரத்தினமாகும். இவர் எமது ஈழத்திருநாட்டின்மாமனிதர். முன்னைநாளில் சிறந்த ஒரு படப்பிடிப் பாளர். ஸ்ரான்லி வீதியில் அமைந்தி ருந்த கலைஞானி படப்பிடிப்பு நிலையத் தின் உரிமையாளரும் இவரேதான். இவர் தனதுபொழுதுபோக்காக அரும்பொருட் சேகரிப்பில் ஈடுபட்டுவருகிறார். இத்த கைய பெரியாரை 'மாற்றம்' வாசக ருக்குச் செவ்வி மூலம் அறிமுகம் செய் வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.



கே:- இத்துறையில் ஈடுபடுவதற்கு ஏதாவது காரணங்கள் உண்டா?

ப:- முதலில் பொழுதுபோக்காக ஆரம்பித்தேன். பின்பு முன்னைய புராதன அம்சங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்பதற் காக ஈடுபட்டுள்ளேன்.

கே:- இந்தத் துறையில் மறக்கமுடியாத சம்பவங்கள் ஏதாவது உண்டா?

ப:- நிறைய இருக்கின்றன. பலாலி அம்மன்கோயில், ஊரெழு அம்மன் கோயில், உரும்பராய் பர்வத அம்மன்கோயில் ஆகிய ஆலயக் கிணறுகளில் புராதன சிலைகள் இருப்பதாக அறிந்து சென்றபோது என்னைக் ''கள்வன்'' என்று பூசகரும், ஏனையோரும் கத்தியதும், 1964-ம் ஆண்டளவில் மாதகலில் இருந்து திருவடிநிலைக்குச் செல்லும் போது தடியால் நிலத்தைத் தட்டித்தட்டிப் பார்த்துச்செல்ல ''விசரன்'' என ஊர்மக்கள் கதைத்துக்கொண்டதும், ஒமந்தை சேமமடு காட்டுப் பிரதேசத்தில் கற்படுக்கைப் பகுதிக்குச்சென்றபோது குடிக்க நீர் இல்லாது தவித்ததும், கதைக்கக் குரல் வராமல் துடித்ததும், மறக்கமுடியாத சம்பவங்களில் சிலவாகும்.

கே:- நீங்கள் எத்தனை தடவை கண்காட்சிகளை வைத்துள்ளீர்கள்?

ப:- 3 தடவை நடத்தியுள்ளேன். 1974-ல் தமிழாராய்ச்சி மாநாட்டிலும், 1991-ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், 1992 ஆவணி மாதத்தில் நாவலர் கலாசார மண்டபத்திலும் நடத்தியுள்ளேன்.

கே:- இன்றைய போர்க்கால சூழ்நிலையால் உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றி கூறுவீர்களா?

ப:- 1986-ல் குரும்பசிட்டியில் எனது அரும்பொருட் சேகரிப்பில் 7 லொறி பொருட்கள் சிங்கள இராணுவத்தால் கொள்ளையிடப்பட்டதும், 1991-ல் எனது ஸ்ருடியோவில் 4 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டதும் முக்கியமானவை. இதைவிட நாளாந்தம் பல பிரச்சினைகள் உண்டு.

கே:- 'அரும்பொருட் காட்சியகம்' அமைப்பதுதொடர்பாக தங்களுக்குள்ள பிரச்சினைகள் எவை?

ப:- நான் நாடோடியாக அலைகிறேன். நான் எழுந்து நடக்கவே உதவி தேவையாக உள்ள இந்த நேரத்தில் என்னிடம் தற்போதுள்ள 3 லொறிகள் கொள்ளக்கூடிய அரும்பொருட்களையும் தூக்கிச்செல்வது இலகுவான காரியமல்ல. அரும்பொருட்களைப் பராமரிப்பதற்குத் தேவையான நிதியும் என்னிடமில்லை. இச்சூழ்நிலையில் அரும்பொருட் காட்சியகம் அமைப்பது தனிமனிதனான என்னால் இயலுமா? இல்லைத்தானே.

கே:- உங்களுடைய வாழ்வின் பின்னால் நீங்கள் சேகரித்து வைத்துள்ள அரும்பொருட்களைப் பேண யாரையாவது வாரிசாக வைத்துள்ளீர்களா?

ப:- எனது துறையில் ஆர்வமான பிள்ளைகள் எல்லாம் என்பிள்ளைகள்தான். இருந்தும் இப்போது ஒரு இளைஞனை என்னுடன் வைத்திருக்கிறேன். அவருடைய எதிர்காலம் எனது பொருட்களைப் பேண உதவுமா? என்பது எனக்குத் தெரியாது.

கே:- தமிழரது நல்லூர் இராசதானி தொடர்பான ஆதாரங்கள் உங்களிடம் உண்டா?

ப:- உண்டு. நல்லூர் இராசதானி இருந்த இடங்களை ஆராய்ந்தால் பல அரும்பொருட் சான்றுகளை எடுக்கலாம். அதற்கு சகலரதும் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

கே:- தங்களது அரும்பொருட்கள் எதிர்காலச் சந்ததிக்குப் பிரயோசனமாக இருக்கத் தங்களது திட்டம் என்ன?

ப:- அறிஞர்கள் சிலரைக்கொண்ட 'அறங்காவற்குழு' ஒன்றை அமைத்து எனது அரும்பொருட்களை எதிர்காலத்தில் பயன்பட ஏதாவது செய்யும்படி வேண்டியுள்ளேன்.

☆ இவ்வளவு நேரமும் எமக்கு ஒத்துழைத்ததற்கு நன்றி ஐயா.

நன்றி.

# தமிழ்த்தாய் மன்றம்

உலகத் தமிழ் மக்களின் சுபீட்சமான வாழ்வும்; ஒளிமயமான எதிர்காலமும் என்னும் இலட்சியத்தினை கொண்டு இயங்கி வருகின்ற தமிழ்த்தாய் மன்றம் உருவாக்கித் தந்த முத்துக்களே இச்சஞ்சிகையின் எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள், உதவியாளர்கள் எல்லாம்.

தமிழ்த்தாய் மன்றம் ஆயிரத்தித்தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு புரட்டாதி மாதம் பத்தாம் திகதி யாதுமூரான் அவர்களைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

இம்மன்றம் தமிழ்த்தாய் நூலகம், தமிழ்த்தாய் இலவச கல்விச் சேவை, தமிழ்த்தாய் கல்வி நிறுவனம், தமிழ்த்தாய் மாணவர் மன்றம், தமிழ்த்தாய் கலை பண்பாட்டுப் பேரவை, தமிழ்த்தாய் நலன்காப்பாளர் அவை, தமிழ்த்தாய் வெளியீட்டகம், தமிழ்த்தாய் சனசமூக நிலையம் என பல்வேறு நிர்வாக அலகுகளை உருவாக்கி செயலாற்றுகிறது.

மேலும், இம்மன்றம் விபுலாநந்த ஞாபகார்த்த பொதுஅறிவுப் போட்டி ஒன்றை நடத்தி 'தங்கப்பதக்கம்' முதலான பரிசில்களை வழங்கியது மட்டுமன்றி, புலவர் ஜெகந்நாதன் போன்ற தமிழறிஞர்களை கௌரவிக்க 'தமிழ்விழா' ஒன்றையும் சிறப்பாக நடாத்தியது. தமிழ்த்தாய் மன்றம் பாடசாலைகளில் இலவசமாக துரித தமிழ்ப் பயிற்சி வகுப்பையும் நடத்தியுள்ளது.

இவர்களின் இவ்வாறான சேவை நிலைக்க வேண்டும் என்பதே எமது ஆசை.

# பொது அறிவுப் போட்டி:01

(1) தென் ஆசியாவிலேயே முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் பாடசாலை ஈழத்திலேயே உள்ளது அது எது?

(2) 'மீன் பாடும் தேனாடு' என வர்ணிக்கப்படும் ஈழநாட்டு நகர் எது?

(3) அடக்குமுறை இருளிலே தமிழீழம் ஆட்பட்டுக் கொண்டிருந்த வேளை இளஞ்சூரியன் என எழுந்த ஒரு தமிழ் வீரன் தமிழர் உரிமை வேண்டித் தனிஒருவனாகப் போராடி முதலில் வீரமரண மடைந்தான். அவன் யார்?

(4) தமிழ் மன்னர்களாகிய சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் என்போர் யாழ்ப்பாணத்தை ஆண்டபோது அவர் பயன்படுத்திய நாணயம் நந்திச்சின்னம் பொறித்ததாகும் அந்நாணயத்தின் பெயர் என்ன?

(5) மேற்கத்தைய சாதனையாளர்களுக்கு இணையாக பல சாதனைகள் படைத்து ஆங்கிலக் கால்வாயை நீந்திக்கடக்க முயற்சித்த போது மரணித்த ஈழநாட்டு சாதனையாளன் யார்?

(6) ஆசியாவிலேயே மிகப்பெரிய சிறந்த அறிவாலயம் (நூல்நிலையம்) ஈழத்தில் இருந்தது அது சிங்களக் கூலிகளால் எரியூட்டி அழிக்கப் பட்ட ஆண்டு எது?

(7) வன்னி மண் ஏகாதிபத்தியத்தை எப்போதும் எதிர்த்தே நின்றது இவ்வாறு ஐரோப்பியரை எதிர்த்து நின்ற வன்னி மன்னன் யார்?

(8) ஒவ்வொரு நாட்டிற்கும் தேசிய விளையாட்டு என ஒவ்வொரு விளையாட்டு கருதப்படும். பிரித்தானியாவின் தேசிய விளையாட்டு துடுப்பாட்டம் (Cricket) அமெரிக்காவின் தேசிய விளையாட்டு பேஸ் போள் (Base ball) அப்படியாயின் ஈழத்தமிழர்களின் தேசிய விளையாட்டு / விளையாட்டுகள் எது / எவை?

(9) ஈழத்திலே தோன்றி கல்வி, சமய, மக்கள்பணி புரிந்த பெரியார் ஒருவர் 'வசனநடை கைவந்தவல்லாளர்' எனப்பட்டார் அவர் யார்?

(10) உலகமொழிகளிற்கு பல சிறப்புப்பெயர்கள் வழங்கப்படுகின்றன. கிரேக்கமொழி சட்டமொழி எனவும், ஆங்கில மொழி வர்த்தக மொழி எனவும், பிரெஞ்ச்மொழி காதல்மொழி எனவும், அழைக் கப் படுகின்றன. அப்படியாயின் தமிழ்மொழியின் சிறப்புப்பெயர் எது?

நன்றி: தமிழ்த் தாய் மன்றம்

(உங்கள் விடைகளை 15 - 12 - 1992 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வையுங்கள்)

# எயிட்ஸ் (A.I.D.S.)

மனிதர்கள் தமது பிறப்பின் பெருமையைப் புரியாமல் தமது தீய மார்க்கங்களினால் தம்மை அழித்துக் கொள்கின்றனர். தமது உடலை சீரிய வழியில் பயன்படுத்தாமல், தவறான வழிகளில் பயன்படுத்தி கொடிய வியாதிகளை பெற்றுக் கொள்கிறார்கள். அவ்வாறாக துன் மார்க்கங்களின் போக்கினால் ஏற்படும் நோய்களில் முக்கியமான நோயான ''எயிட்ஸ்'' நோயை நோக்குவோம்.

இந்நோய் HIV வைரஸ் கிருமியினாலே உண்டாகிறது. இந்த வைரஸ் கிருமிகள் நோயுள்ள மனிதனின் உடற்திரவங்களில் காணப்படு கின்றன. இரத்தம், இந்திரியம், எச்சில், சிறுநீர், கண்ணீர், பெண்பால் உறுப்பிலிருந்து சுரக்கும் திரவம், தாய்ப்பால் போன்றவற்றில் காணப் படுகின்றது. நோய் பரப்புவதில் இரத்தமும், இந்திரியமும், பெண்பாலு றுப்பிலிருந்து சுரக்கும் திரவமுமே முக்கியமானவை.

எயிட்ஸ் நோயுள்ள ஒருவரின் இரத்தம், இந்திரியம், அல்லது பெண்பாலுறுப்பிலிருந்து சுரக்கும் திரவம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று சுகதேகி ஒருவருடைய இரத்தம், மென்சவ்வு போன்றவற்றுடன் தொடர்புபடும் போது அனேகமாக இந்நோய் தொற்றிக் கொள்கிறது முக்கியமாக வாய், மலவாசல், பாலுறுப்பு என்பனவற்றிலுள்ள மென் சவ்வினூடாக தொற்றிக் கொள்கிறது.

ஒரு ஆணோ பெண்ணோ பலருடன் உடலுறவு செய்திருப்பின் அவர் களிடம் HIV வைரஸ் தோன்றி நோய் ஆரம்பமாகிவிடுகிறது. நோயுற் றவர் மூலமாக ஏனையவருக்கும் பரவிக்கொள்கிறது அதுமட்டுமன்றி இயற்கைக்கு ஒவ்வாத தன்னின பாலுறவு மூலமாகவும், வழமைக்கு மாறான பாலுறவு மூலமாகவும் இந்நோய் பரவுகிறது. அதிகமாக விபச்சாரத்தின் மூலமாகவே எயிட்ஸ் நோய் ஏற்படுகின்றது.

அறிகுறிகள்:

திடீரென அதாவது ஓரிரு மாதங்களுக்குள் தனது எடையில் 10% இழத்தல், ஒரு மாதத்திற்கு மேல் மாறாமல் நீடிக்கும் வயிற்றோட்டமும் காய்ச்சலும் முக்கியமான அறிகுறிகளாகும். ஒரு மாதத்திற்கு மேல் நீடிக்கும் தொடர்ச்சியான இருமல், உடல் பூராவும் ஏற்படும் சொறியுடன் கூடிய சருமநோய், மீண்டும் மீண்டும் தோன்றும் ஒருவகை வைரஸ்

நோய், உடல் பூராவும் பரவும் ஒருவகை வைரஸ் நோய்' வாயிலும் தொண்டையிலும் ஏற்படும் பங்கசுநோய், பல இடங்களில் தோன்றி மறையாமல் இருக்கும் சொறிகள், மறதி, சிந்தனைத் திறனை இழத்தல் என்பன எயிட்ஸ் நோயின் சாதாரண அறிகுறிகளாகும்.

எயிட்ஸ் நோய் வருவதைத் தடுக்கும் வழிமுறைகள்:

(1) ஒருவனுக்கு ஒருத்தி எனும் நெறிமுறையை கடைப்பிடியுங்கள்.

(2) பலருடன் உடலுறவு வைத்திருக்கும் எவருடனும் பாலுறவு கொள்ளாதீர்.

(3) உங்களுக்கு ஊசிபோடும் போது கிருமி நீக்கிய ஊசிகளைப் போடும் வைத்தியரை நாடுங்கள்.

(4) இரத்தம் ஏற்றவேண்டியிருப்பின் நம்பிக்கையான நன்கு பரிசோதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்தே இரத்தத்தை பெறுங்கள்.

மனிதர்கள் அனைவரும் நெறியாக வாழ்வார்களேயானால் எயிட்ஸ் எனும் கொடியநோய் அவர்களை அணுகாது என்பதை அனைவரும் உணர்ந்தால் எல்லோரும் சுகமாக வாழலாம்.

ம. தை.

## ஊர்ப்பெயரில் உயிரினங்கள்

| | |
|---|---|
| ஆடுதுறை | காக்கை தீவு |
| திருப்பாதிரிப் புலியூர் | வெளவால் தீவு |
| பண்டியந்தாழ்வு | கொக்குவில் |
| நாகதம்பிரான் கோவில் | ஆட்காட்டிவெளி |
| நாய்ப்பட்டிமுனை | காகம்பிட்டி |

* இவ்வாறான ஊர் பெயரில் உயிரினங்கள் அடங்கிய ஊர்களை எழுதி அனுப்புங்கள். கூடுதலான பெயர்களை எழுதி அனுப்புபவர்களுக்குபரிசில்கள் வழங்கப்படும்.

* ஊரின் பெயர்களையும் அவ்வூருக்கு அப் பெயர்கள் தோன்றுவதற்கான காரணங்களையும் 15 - 12 - 92க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள் பரிசில்கள் உண்டு.

ஆ-ர்.

# "ஹலி" யின் வால்வெள்ளி

வால்வெள்ளி என்பது தலையும் வாலும் கொண்ட ஒரு நீண்ட ஒளிப்பிழம்பு. வால்வெள்ளிகள் ஞாயிற்றுத் தொகுதியின் வெளியில் இருந்து வந்து சூரியனைச் சுற்றிக்கொண்டு மீண்டும் ஞாயிற்றுத் தொகுதிக்கு வெளியே செல்லும் சில ஞாயிற்றுத் தொகுதிக்குள்ளேயே சூரியனைச் சுற்றிவரும். உதாரணமாக ''ஹலி'' யின் வால்வெள்ளியின் பாதை நெப்டியூனுக்கும், புளூட்டோவிற்கும் இடையில் அமைந்துள்ளது. வால் நட்சத்திரங்கள் பூமியை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகின்றன. ஆனால் சிலவற்றின் பாதை பரவளைவாகவும், சில அதிபர வளைவாகவும் உள்ளன. நீள்வட்டமான பாதைகளுள்ள வால்வெள்ளி குறிப்பிட்ட காலங்களில் மீண்டும் மீண்டும் தோன்றும். இவை சூரியனைச் சுற்றிவர எடுக்கும் காலம் நூறு தொடக்கம் பல்லாயிரம் ஆண்டுகள் வரை வேறுபடும். சூரியனுக்கு அருகில் வரவர வால்வெள்ளிகளின் வேகம் அதிகரிக்கும். அப்போது அவற்றின் வேகம் 300 மைல்/செக். ஆக இருக்கும்.

வால்வெள்ளிகள் ஒளிராப் பொருள்கள் ஆகும்; வால்வெள்ளிகளில் மூன்று பகுதிகள் உண்டு. அவற்றில் முதற்பகுதி கரு. இது விலசற் கூட்டங்களால் ஆனது. சுற்றியுள்ள பகுதி ''கோமா'' ஆகும். கருவையும் கோமாவையும்சேர்த்து நாம் வால்வெள்ளியின் தலைப்பகுதி என அழைக்கின்றோம். இத்தலைப்பகுதியில் சோடியம் மகனீசியம், இரும்பு, நிக்கல் என்பவை வாயு நிலையில் உள்ளன இவை இரண்டையும் அடுத்து, வால்வெள்ளிகளின் மூன்றாவது பகுதி வால் பகுதி ஆகும். வாற்பகுதியில் ஐதரசன், காபன் வாயுக்கள் உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட வாலுள்ள வால்வெள்ளிகளும் உண்டு. வாற்பகுதியிலுள்ள சிறு துணிக்கைகள் வால் நட்சத்திரங்களின் தலைப்பகுதியின் ஈர்ப்புவிசையால் அதனைத் தொடர்ந்து செல்கின்றன. சூரியனுக்கு அருகே செல்லும்போது தலையில் ஈர்ப்பு சக்தியால் இழுக்கப்படுவதைக் காட்டிலும் கூடுதலாகச் சூரியனது ஒளிச் சக்தியால் வாற்பகுதியிலுள்ள துணிக்கைகள் தள்ளப்படுகின்றன. இதனாலேயே சூரியனை நெருங்கும்போது அதன் வால் நீளமாகவும், சூரியனுக்கு எதிர்ப்புறமாகவும் காணப்படுகின்றது. இவ்வாறு வால் நீளும்போதுதான் இவற்றை எம்மால் தெளிவாக காணமுடியும். மற்றும் சூரியனுக்கு அருகில் செல்லும்போது அவற்றின்

பிரகாசம் அதிகரிக்கின்றது. சூரியனிலிருந்து விலகிச்செல்லும்போது வால் குறுகி மறைந்து போகும். பெரிய வால்வெள்ளிகளின் வால்கள் கோடிக்கணக்கான கிலோ மீற்றர் தூரம் வரை நீண்டிருக்கும். 1910-ல் ஹலியின் வால்வெள்ளி தெரிந்தபோது வானில் 1/3 பகுதி நீளத்தைக் கொண்டிருந்தது.

சேர். ஐசாக் நியூட்டனின் நண்பரான எட்மண்ட் ஹலி என்பவர் நாம் அழைக்கும் வால்வெள்ளியைப் பல ஆய்வுகளை நடத்தினார். இவ் வால்வெள்ளி 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் என கணித்துக் கூறியவரும் இவரே. ஹலியின் கூற்றினை நிருபிப்பதுபோல் ஹலியின் ஆயுட் காலத்தில் 1682 இல் தோன்றிய வால்வெள்ளி பின்பு 1758இலும், 1835 லும், 1910 லும், 1986 லும் தெரிந்தது. இதன் காரணமாகவே அந்த வால்வெள்ளியை நாம் "ஹலியின் வால்வெள்ளி" என அழைக் கின்றோம். 1910 மே - 19இல் ஹலியின் வால்வெள்ளி பூமியில் மோதி பெரும் அழிவை உண்டுபண்ணும் என நினைத்த மக்கள் பெரும் பரபரப் படைந்தனர். ஆயினும் ஹலி வால்வெள்ளியின் வாற்பகுதி பூமியின் ஊடாகச் சென்றது. அவ்வாறு வாற்பகுதி பூமியினூடாகச் சென்றதால் பாதிப்புக்கள் எதுவும் பூமிக்கு ஏற்படவில்லை.

ஹலி என்றால் வால்வெள்ளி, வால்வெள்ளி என்றால் ஹலி என நம்மிற் சிலர் நினைக்கின்றர். வேறு பல்லாயிரக்கணக்கான வால் வெள்ளிகளும் நமது அண்டத்தில் உள்ளன. 1846 ல் பீலா வால் நட் சத்திரம் (Biela Comet) வானத்தில் தோன்றி இரண்டாகப் பிளந்தது. பின் 5 வருடம் கழித்து அதே நட்சத்திரம் தோன்றியபோது இரட்டை யாகத் தெரிந்தது. அதன்பின் அது தெரியவில்லை. 'பிரபீலட் 1980', என்பது ஒரு வால்வெள்ளியாகும். கடந்த 100 ஆண்டுகளில் 20 - 30 வால்வெள்ளிகள் தெரிந்தன.

வால் நட்சத்திரங்களின் ஈர்ப்பு சக்தி குறைவானது ஆகும். எனவே அது தோன்றிய காலத்திலிருந்து அதிகம் வேறுபட்டிருக்க முடியாது. இதைப்பற்றிய தகவல்கள் கிடைப்பின் சூரிய குடும்பங்கள் பற்றிய ஐயங்கள் தீர்க்கப்படலாம். வால்வெள்ளி தமது கிரகத்திற்கு அருகில் வரும்போது வால்வெள்ளியைப்பற்றி அறிய முயல்கின்றனர். ரஷ்யா வினால் வேகா - I, வேகா - II ஜப்பானினால் அனுப்பப்பட்ட பிளானட் A, M, S, T, S ஆகிய விண்கலங்கள் ஹலி' வால்வெள்ளிக்கு அருகில் சென்று அங்கிருந்து நேரடியாக பூமிக்கு படங்களை அனுப்பின

எழுபத்தாறு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூமிக்கு அண்மையில் வரும் ஹலியின் வால் வெள்ளியை 2061 ஆம் ஆண்டு மீண்டும் பார்ப் பதற்கு எமது ஆயுட்காலம் சந்தர்ப்பமளிக்குமா?

வே. இரவி

# கானல்வரி

... ரவிவர்மன்

முன்பு எல்லாம் அவளுடைய தரிசனத்துக்காக நாளெல்லாம் சுற்றித்திரியும் ராம் என்றாவது ஒரு நாள் அந்த வாசலில் பிரியங்கா நிற்கமாட்டாளா? என்னைப்பார்த்து சிரிக்கமாட்டாளா? என்ற ஏக்கத்தோடு பிரியங்கா வீட்டு வீதியால் சென்று கொண்டு இருந்தான்.

வழியில் வந்த பாலு ''டேய் ராம் எங்க போறாய், வா 'சொக்கன்' கடைக்குப் போய் ரீ குடிப்பம்'' என்று கூப்பிட்டான். சைக்கிளை திருப்பிய ராம் பாலுவோடு கதைத்துக் கொண்டு நல்லூர் பின்வீதியால் சென்று கொண்டிருந்தான்.

அப்போது பாலு ''டேய் ராம் உனக்கு என்ன விசரே! அவள் ஒரு விசரி. அவளின்ரை விசரில திரியிறாய், உதை எல்லாம் மறந்திட்டு கவனமாய்ப் படி நீ கம்பசுக்கு போனால் எல்லாம் மறந்திடும். இது எல்லாம் எல்லாருடைய வாழ்க்கையிலும் வாறது தாண்டா'' என்று ராமுக்கு ஆறுதல் கூறினான்.

''டேய் பாலு உனக்கு ஒன்றும் விளங்காது மச்சான் எப்படியடா அவளை மறக்கிறது அவள் இல்லாட்டியும் அந்த வீட்டுப்பக்கமாய் போனால் இரவு நித்திரையாவது வரும். எப்பவாவது அவளைக் காணமாட்டேனா? கதைக்கமாட்டேனா? என்றுதானடா இன்னும் உயிரோட இருக்கிறன். நீ இப்படி விசர்க்கதை கதைக்கிறாய் நீ இப்படி கதைச்சால் உன்னட்டையும் வரமாட்டேன் போடா பாலு எனக்கு இன்றைக்கு 'மூட் அவுட்டாப்' போச்சு பிறகு வாறன்'' என்று சோகம் தொண்டையை அடைக்க வழியோரத்தில் நீர்த்துளிகளோடு கோயில் பக்கமாக சென்றான் ராம். உடனே பாலு ''டேய் ராம் நில்லடா உனக்கு ஆறுதல் சொல்லத்தான் அப்படி சொன்னேன் என்னை மன்னிச்சிடடா'' என்று கூறினான். அதற்கு ராம் ''பரவாயில்லை வாடா வேப்பமரத்தடியில் இருந்துகதைப்பம்'' என்று கூறி வேப்பமரத்தடியில் போய் அமர்ந்தான், பாலு கச்சான் வாங்கி கொண்டு போய் ராமுடன் இருந்தான்.

''அப்போது மச்சான் ராம் நான் கொழும்புக்கு போன பிறகு நடந்தது எதுவும் எனக்கு தெரியாது என்ன நடந்தது என்று சொல்லடா'' என பாலு கேட்டான்.

ஒரு பெரு மூச்சுடன் ராம் தனது வாழ்க்கையின் கடந்த காலங்களை சொல்லத் தொடங்கினான். '' மச்சான் எண்பத்தொன்பதாம் ஆண்டு

நல்லூர் கொடியேற்றத் தன்று நானும் மோகனும் இதிலிருந்து கச்சான் சாப்பிட்டுக் கொண்டு இருந்தனாங்கள். அப்ப பிரியங்காவும், பிருந்தாவும் அவளுடைய நண்பிகளும், வேப்ப மரத்தடியில் இருந்தவை, அப்ப தாண்டா பிரியங்காவை முதல் முதல் கண்டனான் என்னவோ தெரியாதடா, அவளில் என்னை அறியாத ஒரு அன்பு வந்திட்டு அண்டையில் இருந்து ஒரே 'மூஸ்' நாங்களும் இந்த இடத்தில் ஒவ்வொரு நாளும் இருப்பம். பிரியங்கா ஆக்களும் அதிலேயே இருப்பினம் நான் அவளை பார்த்து சிரிப்பன், ஆனால் அவள் சிரிக்க மாட்டாள். நான் பார்க்கேக்க அவள் பார்க்க மாட்டாள். நான் பார்க்காட்டி அவள் பார்ப்பாள் இப்படி இருக்கேக்க ஒரு நாள் நான் கச்சான் வாங்கி மோகனிட்டை கொடுத்து பிரியங்காட்டை. கொடுக்கச் சொன்னன். அவன் ''உன்ரை சரக்குக்கு நீ கொடு என்னை இதில் மாட்டாதை'' என்று நழுவிட்டான் நான் பயந்து பயந்து கால் கை எல்லாம் 'டைப்படிக்க' கச்சானை கொண்டுபோய் பிரியங்காவிடம் நீட்டினன் அவள் தெரியாத மாதிரி இருந்தாள். பிருந்தா 'வாங்கடி' என்று சொல்ல சிரிச்சிட்டு வாங்கினாள். அவள் சிரிச்ச சிரிப்பு தாண்டா என் மனதில இன்னும் இருக்கு'' என்று தொடர்ந்தான்

அடுத்த நாள் ஒரு கடிதம் எழுதி பிருந்தாட்டை கொடுத்து இதை பிரியங்காட்டை கொடுத்து நாளை நான் 5-30க்கு நாவலர் மண்டபத்தடியில் நிற்பன் வந்து முடிவு சொல்லச் சொல்லும் என்று அனுப்பினன்.

---

# ○○○○○ சிறுகதை ○○○○○

---

அடுத்த நாள் நாவலர் மண்டபத்தடியில நின்றேன். 'செட்' வந்தது ஆனால் பிரியங்கா அதில வரேல்ல, பிருந்தா வந்து நான் குடுத்திட்டன் அவள் ஒண்டும் சொல்லேல்ல இன்றைக்கும் கோயிலுக்கு தலையிடி என்று வரல்லை என்றாள் அப்பதான் பிருந்தாட்டை பிரியங்காடை வீடு எங்க எண்டு கேட்டேன் அப்பதான் அவள் சொன்னாள் தன்னுடைய வீட்டுக்கு பக்கத்தில் உன்ரை வீட்டுக்கு கிட்டடான்

உடனே சைக்கிளை எடுத்துக்கொண்டு அதாலே போனன் பிரியங்கா வீட்டுக்குள்ள நிண்டு கூட்டிக் கொண்டு நிண்டாள் நான் அவளை ஐஞ்சாறு தரம் பார்த்திட்டு போனாலும் அவள் என்னை பார்க்கல்லே, பிறகு அவள் உள்ளுக்கு போட்டாள். மச்சான் அண்டைக்கு முதல் நாள் அவளுக்கு பார்த்து இருந்து ஏமாந்து போனன். பிறகு இண்டைக்கும் அவளுக்காக போய் ஏமாந்து கொண்டு தாண்டா இருக்கிறன். என் வாழ்க்கையே வீண் அலைச்சலா

''போய் விடுமோ? என்று தான் டா பயமா இருக்கு'' என்று கூறிய ராமினுடைய கண்களில் கண்ணீர் அலைகள் மோதிக் கரை புரண்டன.

அப்போது பாலு ''மச்சான் பிறகு என்ன நடந்தது'' என்று கேட்டான்.

அப்போது கச்சான் சாப்பிட்டு முடித்து கச்சான் கோதுகளால மண்ணில் பிரியங்கா என்று கீறிக் கொண்டு ராம் தனது வாழ்க்கையின் வசந்த காலங்களை சொல்லத் தொடங்கினன்.

''நான் பிரியங்காவை காதலிப்பதற்காக பிரியங்கா வீட்டுக்கு பக்கத்திலை இருந்த பிருந்தா வீட்டுக்காரரையும் பழக்கம் பிடிச்சனான், நான் அங்கே ஒவ்வொருநாளும் போய்ப் பிரியங்காவைப் பார்ப்பன். அப்ப தான் ஒருநாள் பிரியங்கா பிருந்தா வீட்டை வந்தவள். அப்ப பிருந்தாவிட்ட நான் கதைக்க வேணும் என்று பிரியங்காட்டை சொல்லச் சொன்னனான். பிரியங்கா கடத்திப்போட்டு பிறகு ஒரு மாதிரி வந்தாள் அப்பதான் நான் கேட்டன் பிரியங்கா உங்களுக்கு என்னை பிடிக்கேல்லையா? எனக்கு முடிவு சொல்ல மாட்டீங்களா? எது என்றாலும் நேர சொல்லுங்கோ? இனிமேல் இப்படி கதைக்க சந்தர்ப்பம் கிடைக்காது,சொல்லுங்கோ? பிரியங்கா என்று கேட்டன் அப்ப மச்சான் அவளின்ரை கண் எல்லாம் கலங்கிட்டுது. எனக்கெண்டா ஒன்றும் விளங்கேல்லை. ஏன் நான் ஏதாவது தப்பா கேட்டுட்டேனா 'பிளீஸ்' அழாதையும் என்று சொன்னன். அப்ப அவள் ராம் அதுக்காக இல்லை, ராம் நீங்க ஒன்றும் தப்பு செய்யல்லே ராம் எங்கடை வீட்டு நிலைமை உங்களுக்கு தெரியாது எங்கடை அப்பா இறந்து போனார், நானும் மூன்று தங்கச்சியும் அம்மாவும் தான் இருக்கிறம். மாமாதான் எங்களுக்கு உதவி அம்மாக்கும் வருத்தம் அப்பா சாகமுதல் மாமான்ரை மகனைத்தான் முடிக்கச் சொன்னவராம். அம்மாவும் அந்த எண்ணத்தோட தான் இருக்கிறா. அப்பா குடிச்சு இருந்த காணி, வீடு எல்லாம் வித்திட்டார். மாமா வீட்டிலேதான் இருக்கிறம். இப்படி எல்லாம் பிரச்சனை இருக்கிறதால்தான் முடிவு சொல்ல முடியாமல் இருக்கு ராம் உண்மையில் நான் உங்களை வெறுக்கேல்லை என்று சொல்லி அழுதாடா.

''அப்பநான் பிரியங்கா இது பெரிய பிரச்சனை இல்லை,


அன்ரன் லக்ஷா நகைப்பூங்கா

187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



உமக்கு விருப்பம் இல்லாட்டி ஒருத்தரும் ஒன்றும் செய்ய முடியாது. நான் படிச்சு உங்கட குடும்பத்தை பார்ப்பன் நீர் ஒன்றுக்கும் கவலைப்படாதை யும் உமக்கு சம்மதம் என்றால் நாளைக்கு இதே பச்சைச் சட்டையோட வாரும் என்று சொல்லி அனுப்பின்னான்.

''அடுத்த நாள் நான் பிருந்தா வீட்டில நிற்க அந்த பச்சை சட்டையோட பிரியங்கா வந்தாடா அன்றைக்குத் தான் மச்சான் நான் என்ரை வாழ்க்கையிலேயே சந்தோசமாக இருந்த நாள்'' என்று கூறிய ராம் ஒரு நீண்ட பெருமூச்சுடன் பாலுவின் தொடையில் ஒரு தட்டு தட்டினன். ''ராம் அப்ப பிறகு என்ன நடந்தது என்று'' பாலு கேட்டான்.

''இப்படியே மச்சான் எங்கட காதல் வளர்ந்து வந்தது'' அவளை ஒவ்வொரு நாளும் பார்க்க வேணும் போல இருக்கும். பார்க்காட்டி சாப்பிடவே ஏலாது எப்படியாவது ஒரு முறை என்றாலும் பார்த்திடுவன் அவளும் எப்படியும் ஒவ்வொரு நாளும் என்னைப் பார்க்க வருவாள். எங்களை மாதிரி ஒரு காதலர்களே இல்லை என்ற உணர்வுதான் மச்சான் எங்கட மனநிலை இருந்தது. இப்படி இரண்டு வருஷம் உயிருக்குயிரா இருந்தனாங்கள் மச்சான் ஒரு நாள் கூட அவளை தொட்டது கூட இல்லையடா. என்ரை பிறந்த நாளுக்கு பிருந்தாவீட்டிலைகதைச்சனாங்கள் அப்பதான் நான் அவளிட்ட ஒரு 'கிஸ்' கேட்டனான். அப்ப மச்சான் அவள் 'ராம் லவ் இஸ் கிரேட்' வெறும் காமத்துக்காக காதலை கொச்சைப் படுத்தக் கூடாது. என்று சொன்னாள். எப்ப அவளை தொட முயன்றாலும் ''ராம் லவ் இஸ் கிரேட்'' என்றுதான் மச்சான் சொல்லுவாள். இப்படியே மச்சான் எங்கட காதல் சாம்ராஜ்யத்தில் காமனுக்கே இடம் இருக்கேல்லேயடா. உண்மையிலேயே எங்கட காதலை நினைச்சு நானே பெருமைப்பட்டு இருக்கிறன்'' என்று கூறிய ராமின் குரலில் பெரும் சோகம் இளையோடியதை பாலு உணர்ந்தான்.

சிறிது நேர மௌனத்தின் பின் ராம் மீண்டும் தொடர்ந்தான். ''பிறகு மச்சான் இந்த விஷயம் பிரியங்காவின்ரை அம்மாவுக்கு தெரிஞ்சு போச்சு. அதுக்கு பிறகு பிரியங்கா வெளியிலை வாறதே இல்லை. மாமன் மார் எல்லாம் காவல். அவளைப்பார்க்காமல் என்னாலே ஒன்றுமே செய்ய ஏலாதடா. சாப்பிட முடியல்லே, படிக்க முடியல்லே இப்படி பத்து பதினைஞ்சு நாள் போச்சு எப்படியாவது பிரியங்காவை பார்க்க வேணும் என்று ஒரு நாள் இரவு மோகனை 'சென்றிக்கு' விட்டுட்டு மதில் பாய்ந்து பிரியங்காவின்ரை அறையை எட்டிப் பார்த்தேன். பிரியங்கா தலையணையால் முகத்தை மூடிக் கொண்டு படுத்து இருந்தாளடா வயிறு மாத்திரம் குலுங்கிக் கொண்டு இருந்ததடா. அப்ப தாய் வந்து அழாமைப்படடி என்று 'லைற்றை' அணைச்சுப் போட்டு போயிற்றாடா ஒன்றுமே தெரியேல்லை அப்ப மச்சான் நான் மெதுவாக பிரியங்கா என்று கூப்பிட்டன். தாய் வந்து

லைற்றைபோட்டு டேய் ஆரடா என்று கத்தினா உடனே நான் மதில் பாஞ்சு ஓடி வந்திட்டன். பிறகு நான் பிரியங்காவை பார்க்கவே இல்லையடா. அன்றைக்கு கூட அவளின்ர முகத்தைப் பார்க்கேல்ல. பிறகுதானடா பிருந்தா சொன்னாள் பிரியங்காவை தாய் கொழும்புக்கு அனுப்பீற்றா என்று.

பிறகு எனக்கு என்ன செய்வதென்றே தெரியேல்ல என்று கூறிய ராம் ''டேய் பாலு பிரியங்கா என்னை ஒரு போதும் மறக்க மாட்டாளடா எப்பவாவது ஒரு நாள் அவள் என்னைத் தேடி வருவாளாடா அவளுக்காக தானடா இன்னும் உயிரோட இருக்கிறன். என்றாவது ஒருநாள் அவள் அந்த வாசலில் நிற்க மாட்டாளா என்றுதானடா ஒவ்வொரு நாளும் அதாலே போறன். என்று சோகமே உருவான அந்த முகத்தோடு விம்மினுன் ராம்.

கவலைப்படாதையடா என ஆறுதல் கூறிய பாலு ''டேய் ராம் அப்படி எண்டால் உனக்கு ஒரு கடிதமாவது போடலாம தானே! அது கூட அவளுக்கு முடியாதா? நீ என்னடா எண்டால் இப்படி நம்பி இருக்கிறாய்'' என்றான். ''அதுதானடா எனக்கும் புரியேல்லே'' என்று கூறிய ராம் கைக்குட்டையால் கண்களைஒற்றிக்கொண்டு ''இது கூட அவதாண்டா தந்தது'' என்று கூறி பாலுவினுடைய கையைப்பிடித்து ''டேய் பிரியங்கா என்னை மறந்திருப்பாளடா? அவள் வருவாளாடா?'' என்று கேட்டான். பாலுவுக்கு கண்கள் கலங்கியது. 'டேய் கவலைப்படாதையடா அவ எப்படியாவது வருவாள்'' என்று சொல்லி முடிப்பதற்குள் கோவில் மணியும் அவள் வருவாள் என்று கூறுவது போல் ஒலித்தது. நண்பர்கள் இருவரும் விடைபெற்று சென்றனர்.

ராமுக்கு கடந்தகால நினைவுகள் அவனை வாட்ட தொடங்கியது. பிரிங்யகாவினுடைய முகம் தான் அவனுடைய மனதில் வந்து கொண்டே இருந்தது. சாப்பிடாமல் போய்ப் படுத்து விட்டான். அவனது மனதில் தோன்றிய கேள்விகளுக்கு அவனாலேயே பதில் கூற முடியாமல் இருந்தது. பிரியங்கா என்னை ஏமாற்றி இருப்பாளா என்ற எண்ணம் அவன் மனதில் எழுந்தது. சீ. அவள் தன்னை மறக்க மாட்டீங்கள் என்று சத்தியம் செய்ய சொல்லி என்னைக்கேட்டவள் அவள் அப்படி செய்யமாட்டாள் என்று தனக்கு

PIF

பி. ஐ பர்னாண்டோ
பல் கட்டுபவர்,
கண் பரிசோதகர்
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தானே ஆறுதல் சொல்லிக் கொண்டு இருந்தான். இவ்வாறே அவன் தனக்கு தானே ஆறுதல் கூறுதலும் அவளை எப்போதாவது ஒரு நாள் காண மாட்டேனா என்று அவளுடைய வீட்டு வீதியால் செல்வதுமாக இருந்தான். ஆனால் அவனால் நோய்வாய்ப் பட்டிருந்த பிரியங்காவின் தாயாரைத்தான் காண முடிந்தது. இவ்வாறே நாட்கள் நகர்ந்தன நாட்கள் வாரங்களாயின, வாரங்கள் மாதங்களாயின.

இவ்வாறு அவளைக் காண துடித்து வரும் நாளில் ராமின் சைக்கிள் பிரியங்கா வீட்டு வீதியால் வந்து கொண்டிருந்தது. ராமின் மனமோ பிரியங்காவையே நினைந்துருகிக் கொண்டிருந்தது. பிரியங்கா வீட்டை நெருங்கியவுடன் ராமின் கண்கள் பிரியங்காவை தேடி பிரியங்கா வீட்டு வாசலை நோக்கியது. அப்போது அம் முற்றத்து நித்தியகல்யாணி மரத்தடியில் ஒரு பெண் பூக் கொய்து கொண்டிருப்பதை கண்டான் ராம். அவனுக்கு முதுகுப்புறம் மட்டுமே தெரிந்தது அவனுடைய சைக்கிள் ஒரு அடி கூட அப்பால் நகரவில்லை. பிரமை பிடித்தது போல் ராம் அசையாது நின்றான். பிரியங்காவை போல் தான் இருக்கிறது. ஆனால் மொத்தமாக இருக்கிறதே! அவள் தானா என்று ஏங்கினான். ஆம் பிரியங்காவேதான் கழுத்திலே துவாயோடு முகம் கழுவி விட்டு சுவாமிக்கு பூக்கொய்து கொண்டிருந்தாள்.

சைக்கிளை விட்டு இறங்கிய ராம் பிரியங்கா பிரியங்காம்மா என்று மெதுவாக கூப்பிட்டான். எங்கோ கேட்ட அந்த அன்புக்குரல் கேட்டு ஆவலுடன் திரும்பிய பிரியங்கா பிரமித்து நின்றாள். அவளுடைய உதடுகள் 'ராம்' என்று உச்சரித்தன. ஆனால் சத்தமோ வரவில்லை தனது உதடுகளை பற்களால் கடித்துக் கொண்டு ஒரு சில வினாடிகள் ராமை நோக்கினாள். அவளுடைய உணர்வுகளை ராமினால் புரிந்து கொள்ள முடியவில்லை. அழுகிறாளா சே! அது கூட ராமினால் அறிய முடியாமல் முகம் கழுவிய நீர்த் துளிகள் அவள் முகத்தில் கோலம் போட்டிருந்தன. அவள் சிரிக்கிறாளா? அவளுடைய உதடுகள் பற்களுக்குள் சிறைப்பட்டு துடித்துக் கொண்டிருந்தன. ராம் மெதுவாக மதிலருகே சென்றான். உடனே பிரியங்கா வீட்டுக்குள் ஓட்டம் பிடித்து விட்டாள். ராமிற்கு ஒன்றுமே புரியவில்லை. பிரியங்காவை கண்ட சந்தோஷத்தில் உலகத்தையே மறந்த ராம் தனது சந்தோஷத்தை நண்பர்களுக்கு தெரிவிப்பதற்காக பாலு வீட்டை நோக்கி விரைந்தான். அவனது சைக்கிள் என்றுமில்லாத வேகத்துடன் பாலு வீட்டை வந்தடைந்தது. சைக்கிளை விட்டிறங்கிய ராம் பாலு……… ……… பாலு ……… என்று கத்திக் கொண்டே வீட்டினுள் சென்றான்.

வீட்டுக்குள் இருந்து வந்த பாலுவின் அம்மா '' என்ன ராம் கன நாளுக்கு பிறகு இவ்வளவு சந்தோஷமாக வாறீர்! என்ன விசயம் என்று கேட்டாள். '' அன்ரி பிரியங்கா வந்திட்டாள்'. அவளை இப்ப

கண்டனான்.'' என மூச்சிளைத்
தான் ராம். எங்க பாலு அவ
னுக்கு சொல்லத்தான் ஓடி
வந்தனான், எங்கே போட்டான்
என்று ராம் கேட்க நீரும் அவ
னும் மோகனும் ஏதோ அநா
தை விடுதி நடத்தப்போறீங்
களாம் அதுதான் உங்கட இலட்
சியமாம் அதுக்காக சந்திச்சு
கிட்ட இரண்டு வீடு எடுத்து
ஆயத்தஞ் செய்யப்போயிற்றாங்
கள்." என்று சொல்லி முடிப்
பதற்குள் பாலுவின் சைக்கிள்
சந்தியை சங்கமிக்க விரைந்தது.

ராம் வரும் வேகத்தை
கண்ட பாலு ''மோகன் அங்க
பாரடா ராம் வாற வேகத்தை
ஒரு வேளை அவனுக்கு ஏதா
வதுதட்டீற்றுதோதெரியேல்ல''
என்று கூறினான் பாலு வேக
மாக வந்த ராம் மோகனையும்
பாலுவையும் கட்டிப்பிடிச்சு
ஏய்...... பிரியங்கா வந்திட்டா
டா என்ரை பிரியங்கா என்
னட்ட வந்திட்டாடா என்று
கூச்சலிட்டான். அவனுடைய
சத்தம் அவன் பிரியங்காமேல்
கொண்ட அன்பின் மகிமையை
யும் காதலின் ஆழத்தையும்
காட்டியது.

இதைக்கேட்ட மோகனும்
பாலுவும் ராமிற்கு ஒரு முத்தம்
கொடுத்து விட்டு,''இனி உனக்கு
எங்களை தெரியாமல் போயி
டும். எங்களை மறந்திடாதை''
என்று கேலி செய்தனர்.

இந்த சந்தோசத்தில் ராம்
வீட்டிற்கு போய் 'ஷேவ்' எடுத்து
குளிந்து இஸ்திரி போட்ட
உடை அணிந்து கொண்டு பிரி
யங்காவை காண ஓடி வந்தான்.
ஆனால் அவனால் பிரியங்கா
வை காண முடியவில்லை. எப
படியாவது இரவு பார்க்க
வேண்டும் என்று முடிவு செய்து,
பாலுவையும் மோகனையும்
காவல் வைத்து விட்டு பிரியங்
கா வீட்டு மதில் பாய்ந்து
சென்றான்.

வெண்ணிலவும் தன் முழு
வலிமையையும் காட்டி கொண்டு
இருந்தது. பதுங்கி பதுங்கி
பிரியங்காவின் அறைக்கருகே
சென்றான் ராம். ஜன்னல்
ஊடா அறையைப் பார்த்தான்.
பிரியங்காவின் பின் புறம்தான்
தெரிந்தது. அவள் பெட்டிக்குள்
தனது உடுப்புகளை அடுக்கி
கொண்டிருந்தாள். பிரியங்கா
வை கண்ட சந்தோசத்தில்
பிரியங்கா, பிரியங்காம்மா''என
மெதுவாககூப்பிட்டான்''ராம்.
இடிகேட்ட நாகம் போல்
திகைத்து திரும்பினாள் பிரி
யங்கா.

பிரியங்காவினுடைய அந்த
கோலத்தைக்கண்ட ராமினு

தங்கப்பவுண் நகைகளுக்கு...

நித்திய கல்யாணி நகை மாளிகை

162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

டைய இதயமே வெடித்து சுக்கு நூறாக நொருங்கியது போல் இருந்தது. அவளுடைய நெற்றியில் பௌர்ணமியை வென்ற பெரிய குங்குமம். கழுத்தில் தாலி. ராமுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவனுக்கு தனது கண்களையே நம்ப முடியவில்லை. காலையில் அப்படி இருக்கவில்லையே! என்று துடித்தான். ஆனால் காலையில் கழுத்தில் இருந்த துவாயும் முகம் கழுவிய நீர்த்துளிகளும் அவளுடைய இந்த கோலத்தை மறைத்து அவனுக்கு துரோகம் செய்து விட்டதை உணர்ந்தான்.

பிரியங்கா என்னம்மா இது என்னம்மா இந்தகோலம் எனறு அவன் சொல்லி முடிப்பதற்குள் ''போங்க ராம் தயவு செய்து இதிலை நிற்காதேங்கோ ஆராவது பார்த்திடுவர்கள் போங்க ராம் பிளீஸ் போங்க'' என்று கூறி வாயை பொத்திக் கொண்டு அழுதாள் பிரியங்கா ''இல்லை நான் போமாட்டன் நான் போகவே மாட்டன் எனக்கு பிரியங்கா வேணும் எனக்கு என்ரை பிரியங்கா வேணும்'' என்று சுவரில் தனது தலையை அடித்து கத்தினான் ராம். அவனுடைய நெற்றி வெடித்து குருதி அவனுடைய முகத்தையே செம்மையாக்கி விட்டது.

''ராம் அப்படி செய்யாதேங்கோ ராம் ... ராம் ........ பிளீஸ் அப்படி செய்யாதேங்கோ என்று கதறி போங்கோ ராம்'' என்று அழுதாள் பிரியங்கா. ராம் மாட்டேன் நான் போக மாட்டேன்'' என்று கதறினான் இப்ப போங்கோ ராம நாளைக்கு பிருந்தா வீட்டை 2 மணிக்கு வாறன் என்று ஜன்னலை இழுத்து அடித்து மூடிவிட்டாள். அவள் தனது உள்ளக்கதவுகளை அடித்து சாத்தி விட்டாள் போலும். அவள் தனது இதய கதவுகளை சாத்தி விட்டாள்.

உலகமே சூனியமான நிலையில் தனது மனக்கோட்டைகள் இடிந்து மணற்றரைகள் ஆன நிலையில் அவனுடைய கால்களே அவனைத்தாங்க முடியாது தள்ளாடிய நிலையில் சென்றான், ராம்.

அடுத்த நாள் தலையில் பண்டேஜுடன் பிருந்தா வீட்டில் பிரியங்காவுக்காக காத்து நின்றான் ராம். கண்கள் எல்லாம் கண்ணீராக பிரியங்கா வந்து நின்றாள். அவளைக் கண்ட பிருந்தா உள்ளுக்கு ராம் இருக்கிறார் போய்க் கதையடி என்று சொல்லி அனுப்பினாள்.

உடல் எல்லாம் சோர்ந்த

(தொடர் 37ம் பக்கம்)

தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம் ...

லதா நகை மாளிகை

174, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# புலவர் ஜெகந்நாதன்

இன்று ஈழத்தமிழர்களின் வரலாறு மறைக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்றபோதிலும், யாழ்ப்பாணத் தமிழரின் வரலாறு ஓரளவு துலக்கம் பெறத்தொடங்கிவிட்டது. இந்தப் பணியிலே பண்டிதர் பொ. ஜெகந்நாதன் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார்.

புலவர் 1908 ஆம் ஆண்டு ஆவணி பத்தாம் நாள் வேலணையில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை வேலணை அமெரிக்க மிசன் பாடசாலையிலும், சரஸ்வதி வித்தியாசாலையிலும் பெற்றார். பின்னர் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிபெற்றார். 1933 ஆம் ஆண்டு தொடக்கம் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை, இடைக்காடு மகேஸ்வரி வித்தியாசாலை, திருநெல்வேலி செங்குந்தா இந்துக்கல்லூரி, யாழ்ப்பாண சோனியதெருப் பாடசாலை, நயினாதீவு தமிழ்க்கலவன் பாடசாலை என பல பாடசாலைகள் தமிழறிஞரின் கற்பித்தலால் சிறப்புப்பெற்றன.

புலவர் தமது பதினெட்டாவது வயதிலேயே கவிதைகள் ஆக்கத் தொடங்கினார். இவற்றில் பல நூறு கவிதைகள் இன்னும் அச்சேற்றப்படாமல் உள்ளன.

புலவரின் இலக்கியப் பணிகளில் தலையாயது அவர் ஆக்கிய 'அடியார்க்குநல்லார் வரலாற்று ஆராய்ச்சி' நூலாகும். இந்நூல் 1944 இல் சென்னையில் வெளியாகியது. நாற்பத்து மூன்று ஆண்டுகளின் பின் புலவர் தமது எண்பதாவது வயதில் 'யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்' என்ற அரிய நூலை வெளியிட்டார்.

அவருக்கு விழா எடுத்து 'தமிழறிஞர்' பட்டம் வழங்கித் 'தமிழ்த்தாய் மன்றம்' என்ற அமைப்புக் கௌரவித்தது.

இருந்தும் வரலாற்று ஆய்விலே தனி இடம் பிடித்துக்கொண்டுள்ள புலவர் தமது எண்பத்தைந்தாவது வயதில் நல்லூர், சட்டநாதர் வீதியில் இலைமறைகாயாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

யா ன்

---

இரத்தத்தினால் அடித்துத் திருத்தினாலொழிய சமுகத்திற்கு தன் பயங்கரமான குற்றங்கள் எப்போதுமே தெரிவதில்லை.

— காண்டேகர்

# இரண்டாம் உலகப்போர் நிகழ்வுகள்

★ 1922 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் முப்பத்தோராம் திகதி முசோலினி இத்தாலியின் பிரதமராக பதவி ஏற்றார்.

★ 1933 ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதி ஜேர்மனியின் பிரதமராக கிட்லர் பதவி ஏற்றார்.

★ 1940 ஆம் ஆண்டு புரட்டாதி இருபத்தேழாம் திகதி இத்தாலி, ஜேர்மனி, யப்பான் ஆகிய மூன்று நாடுகளும் தமக்குள் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டன.

★ 1941 ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஏழாம் திகதி யப்பான், அமெரிக்கா 'பேர்ள்' துறைமுகத்திற்கு குண்டு வீசித் தாக்கியது. (யப்பான் இந் நடவடிக்கையில் பார்வையாளராக இருந்த அமெரிக்கா போரில் இறங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது)

★ 1942 ஆம் ஆண்டு ஆடி இருபத்தாறாம் திகதி முசோலினி பதவியில் இருந்து நீக்கப்பட்டதுமல்லாமல் கைதும் செய்யப்பட்டார். அதே நேரம் புதிய அரசாக மார்சல் படோனிசிலியோ பதவி ஏற்றார்.

★ 1945 ஆம் ஆண்டு மாசி மாதம் பதினோராம் திகதி றூஸ்வெல்ற் (அமெரிக்க அரசுத் தலைவர்) வின்ஸ்டன் சேர்ச்சில் (இங்கிலாந்தின் அரசுத் தலைவர்) ஜோசப் ஸ்டான்லின் (ரஷ்சிய அரசுத் தலைவர்) ஆகிய மூவரும் தங்களிற்குள் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வொப்பந்தம் ஆனது யால்றா ஒப்பந்தம் என அழைக்கப் படுகின்றது.

★ 1945 ஆம் ஆண்டு சித்திரை இருபத்தெட்டாம் திகதிமுசோலினிக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

★ 1945 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆறாம் திகதி ஹிரோசிமா நகரின் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசித் தாக்கியது.

★ 1945 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஒன்பதாம் திகதி நாகசாகி நகரின் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசித் தாக்கியது.

★ 1945 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இருபத்தாறாம் திகதி ஐக்கிய நாடுகள் அமையம் (U. N. O.) உருவாக்கப்பட்டது.

வேந்தன்

# தருட்டியின் பதில்கள்

பா. முரளி, உரும்பிராய்.

☐ நண்பர்கள் பற்றிய உமது கருத்து?
வாழ்க்கைக்கு வேண்டியவர்கள் வம்பிலும் மாட்டுவார்கள்.

விஜி, நல்லூர்.

☐ பெண்கள் விடயத்தில் பலவீனமான ஆண்கள்பற்றி......
குறைபாடுள்ளவர்கள்.

சாந்தன், நாவற்குழி

☐ இரும்புச் சத்து குறைபாட்டை போக்க!
சகடைக் குண்டுகள்.

சதீஷன், கல்வியங்காடு.

☐ சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மடையர்கள் யார்?
உம் மூதாதையர்.

சுகன்யா, திருநெல்வேலி.

☐ மாவீரைப் புதைப்பது பற்றி ...
அவர்கள் புதைக்கப்படவில்லை. விதைக்கப்படுகிறார்கள்.

சிவா, நல்லூர்.

☐ மக்களை அணிதிரட்ட என்ன செய்யலாம்?
சாந்தன் கோஷ்டி நடத்தலாம்.

மயூரன், நவாலி

☐ அயலவர்களின் உயர்ச்சியைக் கண்டு எரிச்சல்படுபவர் பற்றி?
அவர்கள் சமுகப்பேயின் பெறாமக்கள், கோவேறு கழுதைகள்.

சுபத்திரா, சுண்டுக்குளி

☐ ஆறு அறிவும் எவை?
(1) பார்த்தறிவு (2) கேட்டறிவு (3) சுவையறிவு (4) முகர்ந்தறிவு (5) உணர்வறிவு (6) பகுத்தறிவு

உங்கள் கேள்விகளை உடன் அனுப்பி வையுங்கள்

ஆர்.

# ஏவுபடைக்கலம்

## MISSILE

நாம் ஏவிவிடும் இலக்கை சென்று தாக்கும் கலத்தை ஏவுபடைக் கலம் (Missile) என அழைப்பார்கள். இவ்வகைப் போர்க்கருவியே தற்போது அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இதுவே தற்பேதைய யுத்த தளபாடங்களில் முதன் நிலை பெறுகிறது. ஏவுபடைக்கலங்களில் பல வகையுண்டு. அவற்றில் தரையிலிருந்து வானிலே பறக்கும் விமானத்தை தாக்குபவை, பறந்துகொண்டிருக்கும் ஒரு விமானத்திலிருந்து வேறொரு பறந்து கொண்டிருக்கும் விமானத்தைத் தாக்குபவை, பறந்து கொண்டிருக்கும் விமானத்திலிந்து பூமியிலுள்ள இலக்குகளைத் தாக்குபவை போன்றன முக்கியமானதாகும்.

விமானங்களைத் தகர்ப்பதற்கு ஏவுபடைக்கலம் மிகவும் சிறந்த கருவியாகும், விமானத்தைத் தாக்கும் ஏவுபடைகலம் விமானத்தைப் போலவே தோற்றத்தைக் கொண்டிருக்கும். இது பைலட் இல்லாமலே தானாகப் பறந்து செல்லக்கூடியது. தரையில் இருந்து கொண்டே அதற்கு கட்டளைகளைக் கொடுத்து செயற்படுத்தலாம். அப்படைகலத்தின் நுனியில் வெடிகுண்டு பொருத்தப்பட்டிருக்கும் எதிரி விமானத்துடன் இப்படைக்கலம் மோதியவுடன் —வெடிகுண்டு வெடித்து— விமானத்தை அழித்துவிடும்.

ஏவுபடைக்கலத்தை 'ராடர்' கருவியின் துணையுடன் கட்டுப்படுத்தலாம். ஏவுபடைக்கலத்தை முதன்முதல் கண்டுபிடித்து முதன்முதல் யுத்தத்தில் பயன்படுத்தியவர் ஜேர்மனியராவர். இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போது இவை முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டன. அதன் பின்னரே ஐக்கிய அமெரிக்க, ரஷ்யா போன்ற நாடுகள் அதிசிறந்த நவீன தொழில் நுட்பங்களைக் கொண்ட ஏவுபடைக்கலங்களை தயாரித்து உள்ளன. தற்போது அனேகமான நாடுகளில் ஏவுபடைக்கலங்கள் காணப்படுகின்றன.

ஏவுபடைக்கலங்கள் ரொக்கட்டினாலேயே உந்தப் படுகின்றன அதுமட்டுமல்லாமல் தொழில்நுட்ப அறிவும், செல்வச் செழிப்பும் இக்கலத்தின் ஆக்கத்திற்குத் தேவைப் படுகின்றன இதனால் உலகிலுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளே ஏவுபடைக்கலத் தயாரிப்பில் முன்னணியில் இருக்கின்றன.

# உங்களுக்குத் தெரியுமா?

1. இங்கிலாந்தின் மிகப்பழைய இரு பல்கலைக்கழகங்கள் எவை?
   I) ஒக்ஸ்போட் II) கேம்பிரிட்ஜ்
2. எந்த நாட்டின் தபால் முத்திரைகளில் அந்நாட்டின் பெயர் அச்சிடப்படுவதில்லை?
   இங்கிலாந்து
3. உலகில் அதிக மழை வீழ்ச்சி அமைந்துள்ள இடம் யாது?
   சிராப்பூஞ்சி
4. பறவைகள் அடைகாக்கும் ஆண் பறவை எது?
   தீப்பறவை
5. மழையினை நம்பி பயிர்செய்யும் மக்கள் இலங்கையில் எங்குள்ளனர்?
   யாழ்ப்பாணத்தில்.
6. ஹெலிகப்டர் (உலங்குவானூர்தி) முதலில் பறந்த ஆண்டு எது?
   1907 ஆம் வருடம்
7. உலகிலேயே மிகப்பெரிய நூலகமான 'யுனைடெட் ஸ்டெட்ஸ்லைப்ரரி ஆப் காங்கிரஸில்' உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
   ஏழரைக் கோடிக்கு மேலாகும்
8. சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயான இடைத்தூரம் எவ்வளவு?
   14,973 மில்லியன் கி. மீ. (சராசரி 9.3 கோடி மைல்)
9. உலகிலுள்ள எரிமலைகளில் உயரமானது எது?
   தென் அமெரிக்காவிலுள்ள 'ஞவாலாத்ரி' 6060 மீற்றர் உயரம்
10. உலகின் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல் யாது?
    திருக்குறள்
11. விலங்குகளுள் அதிகதூரம் பாயக்கூடியது எது?
    கங்காரு

12. இலங்கையில் முதன்முதலில் இறுங்கு எவ்வாண்டு பயிரிடப்பட்டது?
1930 ஆம் வருடம்

13. பாம்பில்லாத நாடு எது?
அலஸ்கா

14. மின்னல் வருடமொன்றுக்கு சராசரி எத்தனை முறை மின்னுகிறது தெரியுமா?
160 லட்சம் தடைவைகள்

15. உலகிலுள்ள ஏரிகளுள் மிகவும் ஆழமான ஏரி எது?
சைபீரியாவிலுள்ள பைகால் ஏரி. இதன் ஆழம் 760 மீற்றர்.


நல்லைப் பிரபா

---

## விலங்கினங்களின் நிறங்கள்

காட்டுக்கோழி – ஊதா / கருமையும் வெண்மையும் கலந்த பழுப்புநிறம்
காண்டாமிருகம் – இளஞ்சிவப்பும் கருநீலமும்
காட்டுப் பன்றி – சாம்பல் நிறமும் இளஞ்சிவப்பும்
காட்டுப் பூனை – கறுப்பும் மண்ணிறமும்
நீலக்குருவி – கருநீலம்
கடற்கோழி – பச்சையும் வெள்ளையும்
கரிக்குருவி – கறுப்பும் பழுப்பும்
குயில் – நரை நிறம்
வௌவால் – இளம்நீலமும் கறுப்பும்
பென்குயின் – வெள்ளையும் வெண் சிவப்பும்

- செம்மணியூர், சத்தியா



அசல் 22 கரட் நகைகளுக்கு
ஒரே ஸ்தாபனம்
சுமங்கலி ஜுவலஸ்ஸ்
112, A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# ஊருக்கொரு சுந்தரி

எட்டுமுழ சேலைகட்டி சுந்தரி பூவோடு வருவா, பொட்டோடு வருவா, பொய்யோடு வருவா, புழுகோடு வருவா அவ ஊருக்கே சுந்தரி.

'ஊர் இரண்டுபட்டா கூத்தாட்டிக் கொண்டாட்டம்' என்பார்கள் அந்த ஊர்க்கூத்தாட்டி சுந்தரிதான்.

மூத்த அந்த ஊரிலே குடும்பக் கதையா? கட்டுக்கதையா? வதந்'தி'யா? என்ன செய்தி என்றாலும் 'சுந்தரி' தான் அங்கே தந்தி, சுந்தரி ஒரு வெகுசனத் தொடர்பு சாதனம் – லங்காப்புவத்

சுந்தரியின் கணவன் அந்நியநாட்டில் அகதி இவளுக்கென்ன, ஊர்வம்பு தான் இவள் வேலை.

''அகதிகள் எங்கட ஊரை அசிங்கப்படுத்துதுகள்''

''அவள் வேணி, யாரோட வேறு பெடியனோட திரியிறாளாம்''

''அவன் பெருங்குடிகாரன்; அவளும் ஒகோலி''

''ஆமி தெல்லிப்பழைக்கு வந்திட்டானாம் இங்கேயும் வந்திடுவான்''

இவை சுந்தரியின் விளப்பங்கள், உளறல்கள். சுந்தரியின் விளப்பங்களால் சீரழிந்த குடும்பங்கள் எத்தனை? மரணித்த ஜீவன்கள் தான் எத்தனை எத்தனை?

இவ்வாறான சுந்தரி ஊருக்கு ஒன்று இருந்தாலே போதும் ஊர் இரண்டுபடும் நாடும் உருப்படும்.

('ஊருக்கொரு சுந்தரி' என்னும் பகுதியில் ஒவ்வொரு இதழ்களிலும் கதைகள் பிரசுரிக்க உள்ளோம். குட்டிக் கதைகள், உண்மைக்கதைகள், நகைச் சுவைக் கதைகள் எழுதி அனுப்புங்கள்.)



## பெண்ணே !

முடிவென்று
நீயடித்த
முத்தான
சத்தியங்கள்

ஓ
சத்தியங்கள் கூட
இங்கே
சமாதியாகிவிட்டன

பிளீஸ் . . .
உன்கடைசி
வார்த்தையை
கர்ச்சித்துவிடு
இந்தஜீவன்
கரைஒதுங்க . . . .

ஏன்?
இன்னமும்கூட
இந்த
இருட்டைநீ
விடுவித்துவிடலாம்

சீ . . . ஓ . . .
அழகானமானை
அடையநினைக்கும்
முடவனின்நிலை

இரக்கமற்ற
உன்னிடம்
இதயம்கேட்ட
முட்டாள்
நான்
இறைவனிடம்
வேண்டிக்கொண்ட
தெல்லாம் . . . . .
இப்போ?

- குப்பி. கணேஷ்

## வீறுதமிழ் காத்திடவா!

தமிழே உயிரே என்
தாய் போன்றவளே
தரணி எங்குமே
தாவிவா தமிழன்நாவில்

குழலோசை யாழோசை
கூடக்கூ குயிலோசை
உன்னோசை தமிழோசை
உயிரான இன்னோசை

கூன்விழுந்த பெருந்தமிழே
குற்றுயிராய்க் கிடப்பவளே
தெருவில் நாற்றம் வீசும்
தெருப்பிணம்போல் உனையாக்கி
விட்டார்

பீரங்கி புகைகக்கி
பீத்தி மிதிவெடிவைத்து
பிரேமதாசா வால்
முடியாது தமிழழிக்க

பாட்டுக்கொரு கவிஞன்
பாரதியின் சொந்தமொழி
பாரினிலே இனியமொழி
பாரீசிலும் உள்ளமொழி

சொல்லெடுத்து பொருளெடுத்து
பெரும்
சுவையெடுத்து நானிங்கே
வில்லெடுத்து விட்டிடவா
வீறுதமிழ் காத்திடவா!

— சந்துரு

# சுவையான புதினங்கள்

## சுடலைத் திருமணங்கள்

திருமணம்செய்து மனைவியை இழந்த ஆண்கள் மறுதிருமணம் செய்யும்வேளையில் அவர்களது திருமணங்கள் பிணங்களை அடக்கம் செய்யும் மயானத்தில்தான் நடைபெறுகின்றன. முதல் மனைவியின் ஆசீர்வாதம் மறுமணத்திற்குக் கிடைக்கவே இப்படிச் செய்கிறார்களாம். இப்புதினமான நடைமுறை எங்கே நடக்கிறது தெரியுமா? அந்தமான் தீவில் தான்.

## திமிங்கிலங்கள் தற்கொலை

காதல்தோல்வி, வாழ்க்கை விரக்தி என்பனவற்றைத் தாங்கமுடியாமல் மனிதர்கள் தற்கொலை செய்கிறார்கள். அதேபோல் கடலிலே வாழும் திமிங்கிலமும் காதல்தோல்வி, வாழ்க்கை விரக்தியைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்கின்றனவாம்.

## இந்துக்கள் பாடு கஷ்டம்தான்

அறுவைச் சிகிச்சை (ஒப்பரேஷன்) முடிந்த பிறகு அந்தக் காயத்திற்கு ஒருவகை இழையினால் தையல் போடுகிறார்களே. அந்த இழை எதில் தெரியுமா ஆக்கப்படுகிறது. ஆடு, மாடு போன்ற விலங்குகளின் குடலில் இருந்துதான் தயாரிக்கப்படுகிறது. அது மட்டுமன்றி நாங்கள் உட்கொள்ளும் சீனியை வெண்மைப்படுத்துவதற்கும் மாட்டு எலும்புகளையே பயன்படுத்துகின்றனர்.

## நிர்வாண மக்கள்

''நிக்கோபார்'' என்று அழைக்கப்படும் இந்தியாவைச் சேர்ந்த தீவுகளை முன்னை நாளில் சோழர் ஆண்டார்களாம். அப்போது அதை 'ஒக்கவரம்' என அழைத்தார்களாம். ஒக்கவரம் என்றால் என்ன பொருள் தெரியுமா? நிர்வாண மக்கள் வாழும் பகுதி என்பதே. அப்படியானால் ''நிக்கோபார்'' தீவுகளில் சோழர் காலத்தில் உடுப்பில்லாத மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

## சிறுநீரின் பயன்

நாய்கள் அதிகம் புரதச்சத்துள்ள உணவைத்தான் உண்ணுகின்றன. இதனால் அவற்றின் சிறுநீரில் தாவர வளர்ச்சிக்குத் தேவையான ''நைதரசன்'' சத்து உள்ளது. இதனால் தற்போது நாய்களின் சிறுநீரைச் சேமித்து தாவரங்களுக்கு உரமாகப் பயன்படுத்துகிறார்கள்.

## நெற்றியில் ஒட்டாதீர்

இங்கிலாந்தில் முதலாம் சார்ள்ஸ் மன்னர் காலத்தில் விலைமாதர்கள் அதிகமாகக் காணப்பட்டார்களாம். அவர்கள் தங்களை இனங்காட்டிக் கொள்ள நெற்றியில் என்ன ஒட்டினார்கள் தெரியுமா? இப்போது பெண்கள் நெற்றியில் ஒட்டிக்கொள்ளும் ஸ்ரிக்கர்ப் பொட்டுப்போன்ற தன்மையுள்ள, ஒரு கோச் வண்டியைப் பல குதிரைகள் இழுப்பதுபோன்ற ஸ்ரிக்கர் தானாம் அது.

## குழந்தைப் பட்டாளம்

மொராக்கோ நாட்டினை 1646 முதல் 1727 வரை ஆண்ட மன்னர் முல்லா இஸ்மெயிலுக்கு 888 குழந்தைகள் இருந்தன. தமது பிள்ளைகளில் 540 பேரைக்கொண்டதாகத் தனிப்பட்டாளமே அவரது இராணுவத்தில் இருந்ததாம். இதுவும் ஒரு கெட்டித்தனம் தானே.

## இரு கையாலும் இரு மொழி

பலர் வலதுகையால் எழுதுகிறார்கள். சிலர் இடதுகையால் எழுதுகிறார்கள். இன்னும் சிலர் இரு கைகளாலும் எழுதுகிறார்கள். இவர்கள் புதினமானவர்கள் அல்ல. ஆனால் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கார்பீல்ட் புதினமானவர். அப்படி என்னவென்று யோசிக்கிறீர்களா? ஒரே நேரத்தில் ஒரு கையால் கிரேக்கத்தையும், மறு கையால் லத்தீனையும் எழுதும் ஆற்றல் உள்ளவராம்.

## "ரோட்ரிகோ வினன்ட்"


ரோட்ரிகோ வினன்ட் (1866–1926) ஸ்பெயின் நாட்டு இராணுவத்தில் கேர்ணலாகப் பதவி வகித்தார். வாஷிங்டன், பிரஸ்ஸல்ஸ் ஆகிய நகரங்களில் ஸ்பெயின் நாட்டுத் தூதுவராக இருந்துள்ளார். அதற்கு என்ன என்கிறீர்களா! அங்கேதான் அதிசயமே இருக்கிறது. அவருக்கு இரண்டு கால்களும், ஒரு கையும் கிடையாது.

தொகுப்பு : ம. மை.


அன்பளிப்பு

★ நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



★ வீனஸ் வர்த்தக களஞ்சியம்

358, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# நாகசுரம்

நாகசுரம் என்பது தமிழருக்கேயுரித்துடைய ஒரு தமிழிசைக்கருவி. இது துணைக்கருவி வகையைச் சேர்ந்தது இக்கருவி ஆர்ச்சா எனப் படும் மரத்தினால் செய்யப்படுவது. இக்கருவியைச் செய்வதில் தென் இந்திய நாடே தொழில் திறன் பெற்றுள்ளது. இவ்விசைக் கருவியின் உடல் மேலே ஒடுக்கமாகமாகவும் கீழே செல்லச்செல்ல சற்றுப் பெருத் தும் இருக்கும். அதன் மேலும் கீழும் இரு அணைசுகள் பொருத்தப்படும். முன்னை நாளில் வெண்கலத்தாலேயேசெய்தார்கள். ஆனால் தற்போது நடுப்பாகத்தைச் செய்யும் மரத்தினாலேயே அணைசுகளைச் செய்கிறார் கள். மேல் அணைசு நான்கு அங்குல நீளமுடையதாக விளங்கும். அம்மேல் அணைசில் செருகி உதட்டில் வைத்து வாசிப்பதற்கு உதவியாக இருக்கும் கருவி 'சீவாளி' என்று அழைக்கப்படும். சீவாளிக்கும், அணை சிற்கும் இடையே கொண்டை என்ற ஒரு கருவி இருக்கும் கொண்டை யானது செப்புத்தகட்டினால் ஆன குழாயினதும், தேங்காய் ஓட்டில் செய்த இரு வளையங்களினாலும் ஆக்கப்பட்டிருக்கும். சீவாளியில் உள்ள அடைப்பை எடுக்க குச்சில் என்ற ஊசி போன்ற கருவி பயன் படும். இக்தக் குச்சில் முன்னை நாளில் யானைத் தந்தத்தால் செய்யப் பட்டது ஆனால் இன்று அனேகமானவை மாட்டின் எலும்பிலே செய் யப்படுகிறது. குச்சில் நான்கு அங்குல நீளமுடையதாகும் மேல் அணை சுக்குக் கீழே சுமார் நான்கு இடைவெளி விட்டு உடற்பாகத்தில் அங் குலத்திற்கு ஒன்றாக ஏழு துளைகள் வரிசையாக இடப்பட்டிருக்கும். இத்துளைகளின் மூலமே ஏழு சுரங்களும் எழுப்பப்படுகின்றன. இவற் றுக்குக் கீழே நான்கு அங்குலம் தள்ளி ஒரு துளையும், அதனை நடு வாகக் கொண்டு அதன் இருமருங்கிலும் இரண்டிரண்டு துளைகளும் இருக்கும். கீழ் அணைசு கிண்ணம்போல (அடிப்பாகம்) சுமார் ஆறங்குல விட்டமுள்ளதாக இருக்கும். இதன் வாய் விரிந்திருப்பதால் நாகசுர ஒலி வெகுதூரம் கேட்கக் காரணமாகிறது.

ம. மை

அன்பளிப்பு :

★ **லிங்கம் கூல் பார்**

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

# பேனா நண்பர்கள்


தமிழ் மக்களாகிய நாம் பல்வேறு பகுதிகளிலும் தொடர்புகளை நட்புறவுகளையும் வளர்த்துக்கொள்ளல் அவசியமாகும்!

இந்த வகையில் நாம் எம்மை, எமது பொழுதுபோக்குகளை இச் சஞ்சிகையில் அறிமுகப்படுத்துவதனூடான இம்மண்ணில் பல புதிய நண்பர்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறான நட்புறவினால் பரஸ்பர உறவுகளை வளர்த்துக்கொள்ளலாம்: அத்துடன் அவ்வப் பிரதேசங்களைப் பற்றி அறிந்துகொள்ளவும், உதவிகளைப் பரிமாறிக்கொள்ளவும் உதவும். சிலவேளை நண்பர்கள் எதிர்காலத்தில் ஈடிணையற்ற நண்பர்களாவார்கள் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

இதற்கு நீங்கள் செய்யவேண்டியது இதுதான். உங்கள் [1] முழுப்பெயர் [2] வயது [3] முகவரி [4] பொழுதுபோக்குகள் போன்ற விபரங்களையும், எவ்வெப்பகுதிகளில் நண்பர்களை வைத்திருக்க விரும்புகின்றீர்கள் என்பதையும் எழுதி அனுப்புங்கள்.

ஆ-ர்.


ஆடர் நகைகள் 22 கரட் தங்கத்தில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்



இருபா நகை மாளிகை

நகை வியாபாரம்

294, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நிலையில் கதிரையில் சாய்ந்திருந்தான் ராம். அவனைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்தான். ராமைக் கண்டதும் பிரியங்கா தலை கூட நிமிராமல் கதறி அழுதாள், ராமுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை பிரியங்காவை கட்டித்தழுவி அழாமல் செய்ய வேண்டும் போல் இருந்தது. ஆனால் அந்த தகுதியை தான் இழந்து விட்டதை உணர்ந்தா. "பிரியங்கா அழாதையும் எனக்காக பிளீஸ் அழாதையும்" என்று தானே அழுதவாறு சொன்னான். ராமினால் கூட அழாமல் இருக்க முடியவில்லை.

இல்லை ராம் இல்லை நீங்க ஒரு தப்பும் செய்யேல்ல. அம்மாவுக்கும் வருத்தம் நீங்க அன்றைக்கு வந்த இரவு தான் எல்லா உண்மையும் சொன்னவ, நான் உங்களோட வந்து இருந்தா எங்கட குடும்பம் தனிச்சு போடும். மாமாவும் மகனும் தான் உதவி செய்தவை. நான் மச்சானை முடிக்காட்டி ஒருவரும் உதவி செய்திருக்க மாட்டினம். ராம் நான் என்ரை சந்தோசத்தைப் பார்த்தால் அம்மா இருக்க மாட்டா, மூன்று தங்கச்சி மாரும் அநாதையா போயிடுவினம் அதனால் தான் ராம் நான் என்ரை கனவுகளையும் கற்பனைகளையும், காதலையும் எங்கட குடும்பத்தினர் நன்மைக்காக அர்ப்பணிச்சிட்டன். ராம் சத்தி..மா நான் உங்களை இன்னும் வெறுக்கேல்ல. ராம் நான் உங்களோட சேர்ந்து வாழ கொடுத்து வைக்கேல்ல, ராம் என்னை மன்னிச்சிடுங்கோ என அடக்க முடியாமல் அழுதாள் பிரியங்கா. அந்த நேரம் கார் ஒன்று வந்து வாசலில் நின்று 'கோண்' அடித்தது அதில் பிரியங்காவின் அம்மா. சகோதரிகள் எல்லாரும் இருந்தனர். எட்டிப்பார்த்த பிரியங்கா ராம் அம்மா எல்லாரும் வந்திட்டினம். அவர்களை நான் கொழும்புக்கு கூட்டிக் கொண்டு போறன். அதுதான் வந்திருக்கிறன். ராம் எனக்கு ஒரு உதவி செய்வீங்களா என்று கேட்டாள். ராம் ஊமையாக நின்றான். "ராம் நீங்க நல்லா இருக்க

---

சின்னம்மா - மகன் கனடாபோ

ஞன் என்ன செய்கிறுன்?

பொன்னம்மா :

ஒரு ரியூட்டறி போட்டிருக்க
கனவு கண்டஞன்...
என்ன செய்கிறஞே!

— சுந்தர்



வேணும் நீங்கசந்தோஷமா இருக்கணும் அதுதான் என்ரை ஆசை'' என்று கூறி ராமினுடைய காலைப் பிடித்து அழுதாள். அவனுடைய கால்கள் பிரியங்காவின் கண்ணீரால் நனைந்தது. ராம் அப்பொழுது இரண்டு அடிகள் பின்வைத்து ''பிரியங்கா லவ் இஸ்கிரேட்'' அதோட நீங்க வேறு ஒருவருடைய மனைவி என்னை தொடக்கூடாது'' என்று கூறி திருப்பி நின்று அழுதான். முன்பு ராம் தன்னை தொட வந்த போது தான் கூறியதை ராம் இப்பொழுது கூறுவதை உணர்ந்தாள் பிரியங்கா.

கார் பல தடவைகள் கோண். அடித்தது. அப்போது பிரியங்கா ராம் நான் போட்டு வாறன் இல்லை ''ராம் நான் போறன் நீங்க சந்தோஷமா இருங்கோ'' என்று சொல்லி நடந்தாள். அடக்கமுடியாத சோகத்தோடும் அழுகையோடும் ராம் பிரியங்காவை பார்த்து' 'பிரியங்கா ஐ லவ் யூ'' என்றான் அதற்கு அவள் ராம் ஐ லலக் யூ பட் ஐ காண்ட் லவ் யூ ''என்று கூறி காரை நோக்கி நடந்தாள் அப்போது ராம் ''பிரியங்கா அடுத்த பிறப்பிலாவது எனக்கு சொந்தமா வருவாயா? என்று கேட்டான். பதில் கூற முடியாத பிரியங்கா தலையாட்டி ''நிச்சயமா'' என்று கூறி விட்டு காருக்குள் அமர்ந்து விட்டாள். ராமினுடைய இதயம் அவனை விட்டு போகப்போகிறது அந்த இதயமே இன்று வேறொருவருக்குச் சொந்தமாகி விட்டது

கார் புறப்பட்டு சந்தியை தாண்டும் வரை ராமினுடைய சைக்கிளும் காரை தொடர்ந்தது. அவள் இறுதியாக காட்டிய ''டாட்டா'' வுடன் கார் ராமின் பார்வையில் இருந்து விடுபட்டு மறைந்தது. ராம் கார் சென்ற திசையையே பார்த்துக்கொண்டு நின்றான் அவனது விழியோரங்களில் நீர் திரையிட்டது.

கண்ணீரோடு நின்ற ராமினுடைய தோள்களை பாலுவினதும், மோகனதும் கைகள் அரவணைத்து ஆறுதல் கூறி அழைத்துச்சென்றன.


இன்று ராம் பாலுவினதும், மோகனதும் சேவையில் தன்னை முழுமையாக இணைத்து விட்டான்.

பிரியங்காவை எண்ணிய இதயத்தால் அவனால் யாரையும் எண்ண முடியவில்லை, பிரியங்கா என்று அன்பாக உச்சரித்த அந்த உதடுகளால் வேறு ஒரு பெயரையும் அன்பாக உச்சரிக்க அவன் விரும்பவில்லை.

அவள் தன் குடும்ப நல்வாழ்வுக்காக தனது காதலையும், கனவுகளையும் தியாகம் செய்தாள் ஆனால் ராம் அவளுடைய அந்த இனிமையான நினைவுகளோடு தனது வாழ்க்கையை சமுகத்தினால் துக்கப்பட்ட அநாதைகளுக்காக அர்பணித்து விட்டான்.

கல் கரையில் எழுதிய வரிகளை அலைகள் அழிப்பது போன்று அந்த இளம் சிட்டுக்களுடைய காதல் வாழ்க்கை கால ஓட்டம் என்னும் அலையால் அள்ளுண்டு போய்விட்டது இன்று அவர்களுடைய காதல் ''கானல் வரி'' கள் ஆகி விட்டன.

# குறுக்கெழுத்துப் போட்டி - 01



## இடமிருந்து வலம்

01. இவர் அண்மையில் கொல்லப்பட்ட லெப்டினன் ஜெனரல்
02. தீயினால் சுட்டபுண்
04 புரட்சியில் காலுள்ள எழுத்து கெட்டது (பட்சியை ஒத்தது)
05. இது ஒரு கிரகம்
06. இது இதைக் கெடுக்கும் என்பர்
07. இதுவும் ஓர் வாள்
09. மனிதருக்கு நாய் செய்வதை இன்று மனிதரே செய்கிறார்கள்
10. இது வலமிருந்து இடமாக சஞ்சிகையின் பெயர்
11. இடையினங்களில் நான்கு
14. இது ஊரைக் குறிக்கும்
15. அரசன் வம்ஷத்தை குறிக்கும் பெயர்,
16. ஒன்றல்ல குறைவு கால்களுமல்ல

## மேலிருந்து கீழ்

01. குதிரைக்கு இல்லாத அதற்குக்கு உள்ளதாக உவமிப்பார்
02. தானியங்களில் ஒன்று
03. பல்கலைக்கழத்தில் ஒரு துறைத் தலைவரைக் குறிப்பது.

07. வடிவை ஒத்தது.
08. 604,800 செக்கன்கள் கொண்டது
09. கண்ணகிக்கு இருந்ததாக கூறப்படுவது
10. வருட இறுதியில் வரும்காலம்
11. அடியவருக்கு இறைவனும் அருளும் ஒரு பேறு.
13. உலகத்தை குறிக்கும் பெயர் குழம்பி விட்டது.

எவரும் போட்டியில் பங்குபற்றலாம். இக் கூப்பனை நிரப்பி 15.12.1992க்கு முன்னர் எமக்கு கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கவும்.

-யா.ன்.

## போட்டிகள்

உங்களுடைய ஆக்கங்களான (1) கவிதைகள் (2) சிறுகதைகள் (3) கட்டுரைகள் (4) குட்டிக்கதைகள் (5) துணுக்குகள் போன்றவற்றை அனுப்பி வையுங்கள். "பரிசில்கள் உங்களுக்கென காத்திருக்கின்றன. தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

- ஆ.ர்


சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளுக்கு



செல்லையா
சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை வியாபாரம்
191H, 218H, கஸ்தூரியார் வீதி'
யாழ்ப்பாணம்.


இச்சஞ்சிகை தமிழ்த்தாய் மன்றத்துக்காக புதிய செங்குந்தா வீதியில் உள்ள பொற்கமலதேவி பதிப்பகத்தினால் நல்லூர், ஆடியபாதம் வீதியிலுள்ள முல்லை அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

"மாற்றம் சஞ்சிகையே நீ நீடூழி வாழவேண்டும்"

# Green Cheers Tailoring

*11, GRAND BAZAAR,*
*JAFFNA.*

## கிறீன் சியஸ் ரெயிலறிங்

உரிமையாளர் :
சி. சூரியகுமார்

11, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்....

## நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எரிக் கணேஷ்

566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

# ERIC GANESH

**OPTICIANS**

566, Hospital Road,
JAFFNA.

---

சர்வதேச ரீதியில் சிந்திப்போம்
உள்ளூர் ரீதியில் செயற்படுவோம்!

சீருடையாயினும் வேறுடையாயினும் புத்தாடைபோல்
சலவை செய்ய – ''மில்க்வைற் சோப்
மில்க்வைற் சலவைத் தூள்''
இவை ஓர் உள்ளூர் உற்பத்திகள்.

மில்க்வைற் சவர்க்காரம் கட்டி ரூபா 7 - 00
மில்க்வைற் சலவைத்தூள் 50 கிறாம் பை. 6 - 00

25 மில்க்வைற் மேலுறைகள் சலவைத்தூள் பக்கற்றுகள் அனுப்பி நீதிநூல் அல்லது அப்பியாசக்கொப்பி ஒன்றை அன்பளிப்பாகப் பெறுங்கள்.

– ''மில்க்வைற்''



யாழ் மாநகராட்சி மன்ற பொது நூலக
குருநகர் கிளை நூலகம்